பனிமலர்

# அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2051 / மாசி / **MARCH - 2020**





## 51 தமிழ்ச்சங்கங்களின் சுவையான செய்திக் கட்டுரைகள்



## தமிழக அரசின் தமிழ்த்தாய் விருது!

## அமெரிக்காவில் தமிழரின் பாரம்பரிய விளையாட்டு – கபடி





## பேரவையின் உதவும் இதயங்கள்



## உங்களுக்குத் தெரியுமா? வினாக்கள்...

# பேரவைத் தலைவரிடமிருந்து...



அன்புள்ள பேரவை உறுப்பினர் தமிழ்ச்சங்கத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பேரவைப் பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், கொடையாளர்கள் அனைவருக்கும் வணக்கம்.

பனிக் கால அருவி இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். “கொரோனா” நுண்தொற்று நோயின் தாக்கத்திற்கு ஆளாகாமல் இருக்க வேண்டி, நீங்கள் எல்லோரும் தகுந்த முன்னேற்பாடுகள் செய்திருப்பீர்களென நம்புகிறேன்.

பேரவையின் 33 ஆவது தமிழ்விழா, அட்லாண்டா மாநகரில் வரும் ஜூலை 3, 4, 5 தேதிகளில் அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கத்தோடு இணைந்து நடத்த முடிவெடுத்து ஆயத்த வேலைகள் மும்மரமாக நடந்து வந்த நிலையில், கொரோனா நுண்தொற்று நோயின் தாக்கத்தையும், அதனால் வரும் பின்விளைவுகளையும் கருத்தில் கொண்டு, அனைவரின் நலன் கருதி, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் செயற்குழு, 2020-ஆம் அட்லாண்டா மாநகரில் நடைபெறத் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருந்த பேரவையின் 33-ஆம் ஆண்டு தமிழ்விழா நிகழ்வுகளை ஒத்திவைக்க முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழக்கமான சூழலுக்கு மீண்டும் நமது வாழ்க்கை திரும்பியபின், 2020 பேரவை விழா பற்றிய மேலதிக விவரங்கள் அறிவிக்கப்படும்.

நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் கொரோனாவிற்கு எதிரான நோயெதிர்ப்பை வலுவாக்கி, நலமுடன் இருக்க வேண்டுகிறேன். நன்றி

**அன்புடன் சுந்தர் குப்புசாமி, தலைவர்**

**வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை**

### வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை செயற்குழு



தலைவர்
திரு. சுந்தர் குப்புசாமி

செயலர்
திரு.சுந்தரபாண்டியன் சபாபதி

துணைத் தலைவர்
திரு. கால்டுவெல் வேள்நம்பி

இணைச் செயலர்
திரு. சச்சிதானந்தன் வெங்கடகிருஷ்ணன்

பொருளாளர்
திரு. விஜயகுமார் தேவராஜ்

### வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை இயக்குனர் குழு



திருமதி. விஜி அழகர்

திரு. நம்பிராஜன் வைத்திலிங்கம்

திரு. இளங்கோவன் தங்கவேலு

திரு. சிவா வேலுபிள்ளை

# ஆசிரியர் கடிதம்



தை பிறந்தது, பொங்கலும் வந்தது. புத்தாண்டில் தமிழர் மனதில் குதூகலம் பொங்கத் துவங்கிவிட்டதை, இந்தப் பனிமலர் இதழில் வெளியாகியுள்ள நமது சங்கங்களின் செய்திக் கட்டுரைகளிலிருந்து அறிய முடிகிறது. பொங்கல் விழாவின் பெருமையை, அமெரிக்க மண்ணில் மென்மேலும் வளர்க்கும் வகையிலும், இளம் தலைமுறையினரும் பொங்கலின் சிறப்பை அறிந்து கொள்ளும் பொருட்டும் நடத்தப்பட்ட பொங்கல் கொண்டாட்டங்கள் மிக அருமை. அவற்றோடு கூட நடந்தேறிய தமிழ்ப் பாரம்பரியம் நிறைந்த நிகழ்ச்சிகள் மிகப் பெருமை.

தமிழர் திருநாள் கொண்டாட்டங்களோடு மட்டுமின்றி, 'விவசாயம் காப்போம் – நாடகம்', 'உறவுகளின் ஒரு பிடி அரிசியில் உரிமைப் பொங்கல்' தமிழக அரசின் 'தமிழ்த்தாய் விருது', 'மின்னல் கூட்ட நடனங்கள்', பறையிசை நிகழ்ச்சிகள், மருத்துவம் தொடர்பான நலவாழ்வு நிகழ்ச்சிகள், பாரம்பரிய சீன நடன நிகழ்ச்சி, குடும்ப நேரம், 'மாற்றத்திற்கான தலைவர்கள் விருது', பறையும்–பரதமும், 'தமிழ் இனி மெல்லச் சீறும்', தை மாதத்தைத் தமிழ்ப் பண்பாட்டு மாதமாக அறிவிப்பு, தமிழகத் துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களுடனான நிகழ்ச்சிகள், கருத்தாழமும், நகைச்சுவையும் நிறைந்த பட்டிமன்றங்கள், 'தமிழ் ஒளி விருது' நிகழ்ச்சி, திருவள்ளுவர் தின நினைவாக சங்கமம் நிகழ்ச்சி, சனவரி 18, 2020 ஆம் தினத்தை டாலஸ் ஃப்ரிஸ்கோவின் 'சர்வதேச கபடி தினமாக அறிவிப்பு', அமெரிக்கா வந்து அதிகம் மாறி விட்டது ஆண்களா? பெண்களா? விவாத மேடைகள், வேள்பாரி நாடகம், 'திருக்குறள் விளையாடல்' போட்டி, 'அய்யனாருடன் பொங்கல்' எனப் பல்வேறு நிகழ்வுகள் குறித்த சுவையான செய்திக்குறிப்புகள், படிக்கப் படிக்க மனமகிழ்வளிப்பவை..

இந்தப் பனிமலர் இதழ் கட்டுரைகளுக்காகச் சங்கத் தலைவர்களையும், செயற்குழுக்களையும் தொடர்புகொண்டு, அயராது உழைத்து, முன்பேதும் இல்லாதவாறு 51 சங்கங்களின் கட்டுரைகளைத் தொகுத்துக் கொடுத்த அருவி ஆசிரியர் குழுவிற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

கொரோனா தாக்கத்திலிருந்து தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் பாதுகாத்துக்கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு நலம் காத்திட, அருவிக்குழு அன்புடன் வேண்டிக்கொள்கிறது

மீண்டும் அடுத்த மலரில் சந்திப்போம்.


அன்புடன் **இளங்கோவன் தங்கவேலு**

**செயின்ட் லூயிஸ், மிசௌரி.**







# உள்ளே...


| | |
|---|---|
| தமிழ்ச் சங்கச் செய்திகள் | 04 |
| தமிழக அரசின் தமிழ்த்தாய் விருது! | 12 |
| அமெரிக்காவில் தமிழரின் பாரம்பரிய விளையாட்டு – கபடி | 17 |
| இரங்கல் செய்தி | 29 |
| பேரவையின் உதவும் இதயங்கள் | 31 |

## நியூ யார்க் ஆல்பனி தமிழ்ச்சங்கம் – தமிழர் திருநாள் கொண்டாட்டம்

ஆல்பனி தமிழ்ச்சங்கத்தின் “தோரணம் 2020 – தமிழர் திருநாள் கொண்டாட்டம் “, இந்து கலாச்சார அரங்கத்தில் சனவரி மாதம் 25 ஆம் நாள், சனிக்கிழமை அன்று மதியம் 3 மணி அளவில் கோலாகலமாகத் தொடங்கப்பட்டது. இவ்விழாவிற்கு ஐம்பதுக்கும் மேலான தான்னார்வலத் தொண்டர்கள் வந்து உதவி புரிந்தனர். மேடையை அலங்கரிக்க, காய்கறிகளை வாங்கி வர, சமைக்க, உணவினைப் பரிமாற, நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்க எனப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. மகளிரின் கும்மி ஆட்டம், சிறுமியரின் கோலாட்டம், நாடகம், சிறுவர்களின் நாட்டுப்புற நடனம், விவாத மேடை எனப் பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளால் கண்களுக்கு விருந்தளித்ததோடுகூட, நாவிற்கும் சுவையான உணவினைப் பரிமாறி, பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.





## நியூ யார்க்கில் தைப் பொங்கல் திருவிழா




ஜனவரி 18, 2020 அன்று, நியூ யார்க் தமிழ்ச்சங்கம் கொண்டாடிய தைப் பொங்கல் திருவிழாவில், வீணை இசை, வாய்ப்பாட்டு என்று தொடங்கி, மேலும் எட்டுக்கும் மேற்பட்ட நடனக் குழுக்களின் நாட்டியங்களும், நியூ யார்க் தமிழ்ச்சங்கத்தின் “விவசாயம் காப்போம்” எனும் நாடகமும், கவிஞர் அமிர்தனின் இசை வெளியீடும், அரங்கில் இடைவிடாத கரவொலியும், இனிய பொங்கலுடன் சேர்ந்த இரவு விருந்தும் என மக்களின் கண்ணுக்கும், செவிக்கும், வயிற்றுக்கும் விருந்தளித்த பொங்கல் திருவிழாவில் 400-க்கும் மேற்பட்டோர் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.





## இலங்கை தமிழ்ச்சங்கம், ஸ்டாடன் ஐலண்ட் – நியூ யார்க்

இலங்கை தமிழ்ச்சங்கம், ஸ்டாடன் ஐலண்ட் (Staten Island, New York) தமிழ்ப் பாடசாலையின் பொங்கல் விழா, தை மாதம் 18 ஆம் நாளில், போர்ட் ரிச்மண்ட் உயர்நிலைப் பள்ளியில் சிறப்பாக நடந்தேறியது. இவ்விழாவில் ஸ்டாடன் ஐலண்ட் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் ஒயிலாட்டம், கோலாட்டம், நடனம், பாடல்கள் மற்றும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த விழாவில் ஸ்டாடன் ஐலண்ட் மக்களிடமிருந்து நிதி சேகரித்து, ஈழத்தின் வடகிழக்கிலுள்ள இளையோர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்து நடத்திய “உறவுகளின் ஒரு பிடி அரிசியில் உரிமைப் பொங்கல்” விழாவுக்கு உதவி செய்தோம்.

1. முத்தொள்ளாயிர நூலின் பாடுபொருளானது மூவேந்தர் திறன்கள் குறித்துப் புகழ்பாடுவது. அவற்றுள் இல்லாத திறன்?

அ) வீரம் ஆ) கொடை இ) மறம் ஈ) மதியூகம்.







## வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் - 2020 பொங்கல் விழா

ஜனவரி 26, 2020 ஞாயிறு அன்று, வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் மிகச்சிறப்பாகப் பொங்கல் விழா கொண்டாடியது. திருக்குறள் மறையோதலுடன் விழா இனிதே தொடங்கியது. பறையிசையுடன் பொங்கல் கொண்டாட்டம் ஊர்வலமாக வந்து மேடையேறிய காட்சி அனைவரையும் கவர்ந்தது. உள்ளூர்க் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளுடன் “ஆளப்போறான் தமிழன்” தீபக் அவர்களின் திரையிசை நிகழ்ச்சியும் நடந்தேறியது. நமது இளைய சமுதாயத்தினர் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியது அருமையிலும் அருமை. புது செயற்குழு, திருக்குறள் நூல்மேல் கைகளை வைத்து உறுதிமொழியெடுத்து பொறுப்பேற்றது. குடும்ப நடனம் நிகழ்ச்சியில் பல குடும்பங்கள் வந்து துள்ளுமிசைப் பாடல்களுக்கு நடனமாடி பலத்த கைதட்டல்களைப் பெற்றனர். உலக வங்கியில் பணியாற்றும் முனைவர் நடராஜன், இ.ஆ.ப. அவர்கள், சிறப்பு அழைப்பாளாராக கலந்துகொண்டு பொங்கல் வாழ்த்துகள் வழங்கினார். பிற்பகல் 2 முதல் இரவு 9 மணிவரை நடந்த பொங்கல் விழா, தமிழகத்திற்கே பொங்கலுக்குப் போய் வந்ததைப் போன்ற உணர்வைக் கொடுத்தது.







## தென் ஜெர்சி தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழாக் கொண்டாட்டம்

தென் ஜெர்சி தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா, தை மாதம் 5 ஆம் நாள் (ஜனவரி 19, 2020) அன்று மாலை 4 மணியளவில் சிறப்பாகத் தொடங்கியது. தமிழ்ப் பாரம்பரிய உடையில் அனைவரும் குடும்பத்துடன் கலந்துகொண்டனர். விழாவில், குழந்தைகளின் மாறுவேடம், திருக்குறள் ஒப்புவித்தல் மற்றும் ‘தமிழர்களின் விழாக்கள்’ என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி, பெண்களுக்கான பொங்கல் சமைத்தல் போட்டி மற்றும் பெரியவர்களுக்கான வார்த்தை விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் வேடிக்கையாகவும், மகிழ்ச்சியுடனும் நடந்தேறின. போட்டியில் வெற்றிபெற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் இரவு உணவு பரிமாறப்பட்டது. விழாவின் இறுதியில், புதிதாகத் தேர்தெடுக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

2. கற்றவர், கல்லாதவர் ஆகிய அனைவருக்கும் எளிதில் பொருள் புரியும் வகையில் உள்ள சொல் ________ எனப்படும்.

அ) இயற்சொல். ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்





## நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா

நியூ ஜெர்சி தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா, ஜனவரி 26 ஆம் நாளில் நடைபெற்றது. திருமதி. சுமதிஸ்ரீ அவர்களின் சிறப்புரை மற்றும் நியூ ஜெர்சி பேச்சாளர்கள் பங்கேற்ற விவாத மேடை, கண்கவர் கலை நிகழ்ச்சிகள், குழந்தைகள் பங்குபெற்ற பாஞ்சாலி சபதம் நாடகம், கோலப் போட்டி, சர்க்கரைப் பொங்கல் போட்டி போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.





## கென்டக்கி தமிழ்ச்சங்கம் – பொங்கல் திருவிழா

கென்டக்கி தமிழ்ச்சங்கத்தில் இந்த ஆண்டின் முதலாம் நிகழ்ச்சியாக, பொங்கல் திருவிழா இனிதே நடைபெற்றது. சிறப்புப் புகைப்படச் சாவடி, குதூகலமாகப் பொங்கும் பொங்கல் பானை மற்றும் வண்ணக் கோலங்களுடன் அலங்கரிக்கப்பட்ட சுவரொட்டிகள் என அனைத்து ஏற்பாடுகளும் வந்திருந்தோரைக் கவர்ந்தன. சிறார்கள், பெண்கள் மற்றும் ஆண்களின் வியத்தகு நடனங்களும், பாடல்களும் அனைவரையும் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தின. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் குடும்பங்களாகக் கூடியிருந்து நிகழ்ச்சியைக் கண்டும், கேட்டும், கரவொலி எழுப்பியும் களித்து மகிழ்ந்தனர். டிசம்பர் மாதம் 14 ஆம் தேதி, ஆண்டு பொது அமைப்புக் கூட்டம் இனிதே நடைபெற்றது. அதில் 2020 ஆண்டுக்கான நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

3. இலக்கியங்களில் உள்ள நிறை, குறைகளைச் சமமாக அறிந்து மதிப்பீடு செய்யாமல், நிறைகளை மட்டும் எடுத்துக் கூறி அவற்றைப் போற்றும் திறனாய்வு 'பாராட்டு முறைத் திறனாய்வு' ஆகும். ஆனால், ஒரு திறனாய்வாளன் தானே தேர்ந்தெடுத்துக் கொண்ட சில விதிமுறைகளையும், கருதுகோள்களையும் அளவுகோலாகக் கொண்டு குறிப்பிட்ட இலக்கியம் பற்றிய முடிபுகளை அல்லது தீர்வுகளைச் சொல்லும் ஆய்வு?

அ) முடிபுநிலைத் திறனாய்வு ஆ) விதிமுறைத் திறனாய்வு இ) செலுத்துநிலைத் திறனாய்வு ஈ) படைப்புவழித் திறனாய்வு.

## சிகாகோ தமிழ்ச்சங்கம் - 50 ஆவது பொங்கல் விழா



சிகாகோ தமிழ்ச்சங்கம் தனது ஐம்பதாவது பொங்கல் விழாவை பிப்ரவரி 1, 2020 ஆம் நாளில், மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. உலகெல்லாம் உணவுதர, ஏர்முனையில் தன் வியர்வை முத்தமிடும் உழவனுக்கும், பயிர் செய்ய உறுதுணையாக இருந்த செங்கதிரோனுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில், பொன்னிற நெற்கதிரைப் புத்தரிசியாக்கிப் பொங்கலிட்டு, மங்கள மஞ்சளும், சுவைக்கச் செங்கரும்பும் படையலிட்டு பொங்கலோ பொங்கல் என்று விழாவில் கூடியிருந்த தமிழ் உறவுகள் ஓங்கி ஒலித்தார்கள். அமெரிக்க அரசின் மக்கள் பிரதிநிதியான திரு. பில் ஃபோஸ்ட்ர் மற்றும் இலினாய் அரசின் மாநில மக்கள் பிரதிநிதியான திருமதி. இலாரா எல்மென் ஆகியோர் இப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர்கள் சொற்பொழிவாற்றும் பொழுது, தமிழ் மக்களைப் பார்த்து "வணக்கம்" என்று தமிழிலேயே கூறியது மக்களை வெகுவாக உற்சாகப்படுத்தியது.

வான் புகழ் தந்த வள்ளுவர் பெருந்தகை நாளில், தமிழக அரசின் உயரிய விருதான 'தமிழ்த்தாய் விருது' பெற்றதை சிகாகோ தமிழ்ச்சங்கம் வரலாற்றுச் சிறப்பு நிகழ்வாக, மிகவும் பெருமை கொண்டு, பொங்கல் விழாவில் தமிழக அரசுக்கு நன்றி பாராட்டியது. பொங்கல் விழாக் கொண்டாட்டம், பாரம்பரிய நடனங்கள், கவிதை, பறையாட்டம், 'நீயா நானா' புகழ் திரு. கோபிநாத் தலைமையில் விவாத மேடை மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நடைபெற்றது. கண்களுக்கும் செவிக்கும் தமிழ்ப் பாரம்பரியத்தை உணர்த்திய இந்த விழாவில் 700-க்கும் அதிகமான தமிழர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. விழாவில் கலந்து கொண்ட தமிழ் மக்கள், 'பொங்கல் விழா நாட்களில் தமிழகத்தில் இருக்க இயலவில்லையே' என்கிற ஏக்கம் எழாதவாறு மிக்க மகிழ்வுடன் இருந்ததாகக் கூறினர்.

## வளைகுடாப் பகுதி தமிழ் மன்றம் - பொங்கல் விழா 2020







தமிழர்களால் உழவர் திருநாளாகவும், தமிழர் திருநாளாகவும் கொண்டாடப்படும் மாபெரும் விழாவான நம் பொங்கல் விழா, இந்த ஆண்டு சான்பிரான்சிஸ்கோ வளைகுடாப் பகுதி தமிழ் மன்றத்தால் கோலாகலமாக சனவரி மாதம் 11 ஆம் நாளில், டோவர்ட்டி உயர் நிலைப் பள்ளி, சேன் ரமோன் நகரில் கொண்டாடப்பட்டது. காலையில் ஹிட்டன் வேலி பூங்காவில், திறந்தவெளி பொங்கல், மதியம் டோவர்ட்டி பள்ளியில் பானை வண்ணம் தீட்டும் போட்டி, ஓவியப் போட்டி, மருதாணி இடும் போட்டி மற்றும் உறியடி, துரிதக் கூட்டம் (Flash Mob) போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன. முத்தாய்ப்பாக, பள்ளி மாணவர்களுக்குப் பறை இசைக் கருவியைக் கொண்டு, பறையின் சிறப்பு மற்றும் அதன் இசை பற்றிய நேரடி விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. மேலும், மாலையில் இருந்து இரவு வரை 'கலை நிகழ் மையத்தில்' நடைபெற்ற கண்கவரும் கலை நிகழ்ச்சிகள் காண்போரை இருக்கையை விட்டு எழாதவாறு கட்டிப்போட்டன!

மற்றொரு தருணத்தில், மருத்துவர் பெனெடிக்ட் ராஜ் அவர்களுடன் ஒரு பல்வழித் தொலைபேசிக் கலந்துரையாடலை தமிழ் மன்றம் ஏற்பாடு செய்து, இருதயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் இருதய நோய் பற்றிய கேள்வி-பதில் நிகழ்வை, கட்டணம் ஏதுமின்றி, சேவை நோக்கில், சனவரி 18, 2020 அன்று நடத்தியது. மருத்துவருடன் கலந்துரையாடிய ஒலி-ஒளி தொகுப்பினை https://youtu.be/h4g4UucoKF4 என்ற இணையப் பகுதியில் பார்த்துப் பயன்பெறலாம்.

4. அகத்தியரின் மாணாக்கர்கள் நத்தத்தன், செம்பூண்சேய் எனப் பலராவர். மேலும் இருவர் பெயர்களைக் குறிப்பிடுக.

அ) காக்கைபாடினி, தொல்காப்பியர் ஆ) வையாபிகன், துராலிங்கன் இ) அதங்கோட்டாசான், பனம்பாரனார்

ஈ) கழாரம்பன், அவிநயன் உ) மேலுள்ள அனைவரும்.







## தென் மத்திய தமிழ்ச்சங்கம்

தென் மத்திய தமிழ்ச்சங்கத்தின் சார்பில், பிப்ரவரி 1, 2020 அன்று பொங்கல் விழா மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அறங்காவலர்கள் மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டு, கௌரவிக்கப்பட்டனர். சங்க உறுப்பினர்களும் மற்றும் உள்ளூர் திறமையாளர்களும் கலந்து கொண்டு உற்சாகமாக ஆடல், பாடல் மற்றும் இசை நிழச்சிகளை நிகழ்த்தி மகிழ்வித்தனர். உறியடி மற்றும் கபடி போன்ற தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகள் நடைபெற்றன. கோலம் மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்தத் திருவிழாவின் மணி மகுடமாக, சங்க உறுப்பினர்கள் சிலரால் துவக்கப்பட்ட மெம்ஃபிசு பறைக் குழுவினரின் பறையாட்டம் முதன் முறையாக மேடையேறியது. கண்டங்கள் தாண்டிய நம் நேசத்தைப் பறைசாற்றும் வகையில் சீனக் குழுவினரின் பாரம்பரிய சீன நடனமும் நிகழ்ச்சியைச் சிறப்பித்தது. வெற்றிலைப் பாக்கு உள்ளிட்ட 22 வகையான தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள் பரிமாறப்பட்டன.




## ஒக்லஹோமா தமிழ்ச்சங்கம் - பொங்கல் கொண்டாட்டம்

தன் 31 ஆம் அகவையில் நடைபயின்று கொண்டிருக்கும் ஒக்லஹோமா தமிழ்ச்சங்கம், பிப்ரவரி 8 ஆம் நாள் பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடியது. முக்கிய நிகழ்வான கோலப் போட்டி, அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. சிறுவர் சிறுமியர் விளையாட்டு, பாடல், நாடகம், ஜோடிப் பொருத்தம், திரைப்பட வினாடி வினா போன்ற பிற நிகழ்ச்சிகளும் சிறப்புற நடந்தேறின. இறுதியாக, வாழை இலையில் தமிழ்க் கலாச்சார உணவுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.







5. மு.வரதராசனாரின் நாவல்களில் இல்லாத ஒன்று?

அ) கள்ளோ காவியமோ ஆ) கயமை இ) பொய்யா விளக்கு. ஈ) நெஞ்சில் ஒரு முள் உ) கரித்துண்டு

## மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கம் (TSCI) - பொங்கல் திருவிழா 2020

மத்திய இந்தியானா தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா, கடந்த பிப்ரவரி மாதம் 22 ஆம் நாளன்று, இனிய புத்தாண்டு 2020 மற்றும், பொங்கல் திருநாள் வாழ்த்துகளுடன் சிறப்புறத் தொடங்கியது. பிஞ்சுக் குழந்தைகள் முதல் இருபால் சங்க உறுப்பினர்களும், கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஆடிப் பாடி அனைவரையும் மகிழ்வித்தனர். "பாரதிதாசன் கவிதைகள்" தலைப்பிலான பேச்சுப் போட்டி மற்றும் "குடும்ப நேரம்" என்ற மையக்கருத்துடன் நடந்த ஓவியப் போட்டிகளில், பல்வேறு வயதுப் பிரிவினரும் ஆர்வத்துடன் பங்கேற்று பரிசுகள் பெற்றனர். நிறைவாக, சங்க உறுப்பினர் அனைவருக்கும் அறுசுவையுடனான தமிழ்ப் பாரம்பரிய இரவு விருந்து வழங்கப்பட்டது. மேலும், முந்தைய சங்கச் செயற்குழு, தங்கள் இரண்டு ஆண்டுச் சேவைகளை சிறப்புற முடித்ததையடுத்து, புதிய செயற்குழு பதவியேற்றது.









## இரிச்மண்டு தமிழ்ச்சங்கத்தின் "வாழை இலை விருந்து"



இரிச்மண்டு தமிழ்ச்சங்கத்தின் ஒரு புதிய முயற்சியாக, இந்த 2020 புத்தாண்டை இனிதே துவங்குவதற்கு, நமது மண்மணம் மாறா சைவ மற்றும் அசைவ அறுசுவை விருந்து நிகழ்ச்சியினை "வாழை இலை விருந்து" என்ற பெயரில் நமது இல்லத்தில் நடைபெறும் ஒரு விழாவாக, ஜனவரி மாதம் 26 ஆம் நாளில், காட்வின் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ச்சங்கம் வெகு சிறப்பாக நடத்தியது. இந்நிகழ்ச்சிக்காக வடக்கு வர்ஜினியாவில் உள்ள உயர்தர உணவகமான சென்னை எக்ஸ்பிரஸிலிருந்து சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் சிறப்பாக வரவழைக்கப்பட்டன. இதில் 400-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு நாவை கொள்ளை கொண்ட அனைத்து வகை உணவுகளையும் வயிறார உண்டு மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியில் மக்களை மகிழ்விக்கும் வண்ணமாக இளைஞர்களின் "துரிதக் கூட்ட நடனம்" (Flash Mob) மற்றும் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. விருந்து நிகழ்ச்சிக்கு வந்த அனைவரும் இரிச்மண்டு தமிழ்ச் சங்கத்தின் இந்த முயற்சியை வெகுவாகப் பாராட்டினர். விழாவிற்கு வந்த அனைவருக்கும் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக 2020 ஆம் ஆண்டின் தமிழ் நாட்காட்டி வழங்கப்பட்டது. இந்த விருந்து விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இரிச்மண்டு தமிழ்ச்சங்க நிர்வாகிகள் புதிய உத்வேகத்துடனும், மன நிறைவோடும், சிறப்பாகவும் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

6. கீழுள்ள வரலாற்று நாவல்கள்-அவற்றை எழுதியவர்கள், எது தவறான பொருத்தம்?

அ) சிவகாமியின் சபதம் - கல்கி ஆ) பொன்னியின் செல்வன் - கல்கி இ) வேங்கையின் மைந்தன் - அகிலன்

ஈ) கயல்விழி - ஜெகசிற்பியன். உ) யவன ராணி - சாண்டில்யன்





## அர்கன்சாஸ் தமிழ்ச்சங்கம் - பொங்கல் விழா

அர்கன்சாஸ் மாகாணத்தின் தலைநகர் லிட்டில்ராக் நகரில் பொங்கல் விழா அர்கன்சாஸ் தமிழ்ச்சங்கம் சார்பில் ஜனவரி 11, 2020 அன்று கொண்டாடப்பட்டது. மாலை 6 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. திருமதி. பாகம்பிரியாள் வள்ளிநாயகம் மற்றும் திருமதி. அகிலா அரவிந்தன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழாவினைத் துவக்கி வைத்தார்கள். தலைவர் திரு. மகிழ் இராஜேந்திரன் வரவேற்றுப் பேசினார். பின்னர் சங்க உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. சங்க உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகள் ஆடல்கள் மற்றும் பாடல்கள் மூலம் அனைவரையும் மகிழ்வித்தனர். நிகழ்ச்சிகளை நிஷாந்த் மற்றும் ஜெய் ஆதி தொகுத்து வழங்கினர். நிறைவில் செயலாளர் திரு. மீனாட்சி வள்ளிநாயகம் நன்றி கூறினார். தாயகப் பாரம்பரிய விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது. விழா ஏற்பாடுகளை சங்கச் செயற்குழுவினர் சிறப்பாகச் செய்திருந்தனர்.



Dr. T. Sathiyamoorthy

Service Excellence Award 2020



Kanimozhi Mathi

Leaders for Change Award 2020



## கனடியத் தமிழர் பேரவை - ரொறன்ரோ

கனடியத் தமிழர் பேரவை தனது 13-வது பொங்கல் விழாவை ஜனவரி 18, 2020 அன்று, மார்க்கம் ஹில்டன் மண்டபத்தில் கொண்டாடியது. தமிழ்நாட்டில், வைகைப் படுகையிலுள்ள கீழடியில் நடைபெற்ற அகழ்வாய்வை மூடி மறைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தனது சட்டத் திறமையால் வெற்றிகரமாக முறியடித்து, தமிழரின் தொன்மையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியமைக்காக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரான திருமதி. கனிமொழி மதி அவர்களுக்கு இவ்வாண்டுக்கான 'மாற்றத்திற்கான தலைவர்கள் விருது' வழங்கப்பட்டது. மேலும், போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாண மக்களின் கல்வியையும், ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவதில் தன்னலமற்ற சேவைகளைத் தொடர்ந்து அயராது வழங்கி வரும் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி அவர்களுக்கு 'சிறந்த சேவைக்கான விருது' வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்துப் பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக, அவர்கள் கைத்தறிகளில் நெய்திருந்த தமிழரின் பாரம்பரிய ஆடையை விளம்பரப்படுத்துவதற்கான 'பெண்கள் மேம்பாட்டுக்கான நடை' (Walk for Women Empowerment) நடைபெற்றது. தமிழ் இளையோரும், முதியோரும் மேடையில் தோன்றி நம் முன்னோரின் அருகிப்போன ஆடைக் கலாச்சாரத்தை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்தார்கள்.

7. "ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்; உதையப்பர் ஆகிவிட்டால் ஓர்நொடிக்குள்; ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா நீ" இந்தப் பாடலுக்குச் சொந்தக்காரர்?

அ) பாரதிதாசன். ஆ) பாரதியார் இ) புதுமைப்பித்தன் ஈ) சுரதா



# தமிழக அரசின் தமிழ்த்தாய் விருது!

தமிழக அரசின் உயரிய விருதான தமிழ்த்தாய் விருது பெறுவதைசிகாகோ தமிழ்ச்சங்கம், வரலாற்றுச் சிறப்பு நிகழ்வாக, பெருமை கொண்டு மகிழ்கிறது!




திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற அவ்வையின் சொல் கேட்டு, அலைகடல் தாண்டிச் சென்ற தமிழர்கள், மொழி, கலை, பண்பாடு எதையும் மறந்தாரில்லை. விண்ணோடும் முகிலொடும் விளையாடும் உயரமான கட்டிடங்கள் சிகாகோ பெருநகரில் பரவி இருந்தாலும், அதனினும் உயர்ந்தது தமிழ் மொழி என்கிற எண்ணம் கொண்ட சான்றோர்கள் இணைந்து, 1969 ஆம் ஆண்டு வித்திட்டதுதான் இந்த சிகாகோ தமிழ்ச்சங்கம்.

அன்று முதல் இன்று வரை, என்றும் தமிழ் மக்களின் ஒற்றுமை ஓங்கவும், தமிழ் உணர்வினை அடுத்த தலைமுறையினரிடம் வளர்க்கவும் ஒரு தளமாக, ஆல் போல் தழைத்தோங்கி, நாள்தோறும் மலரும் அரும்பாய், இளமையோடும் வலிமையோடும் செயல்பட்டு வருகிறது.

சிகாகோ தமிழ்ச்சங்கம், தன் பொன்விழா ஆண்டில், சென்ற ஜூலை மாதம், "கீழடி நம் தாய் மடி" என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு, 10 ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்க பேரவை ஆகியோருடன் இணைந்து சிகாகோவிலே நடத்தியது.

வான் புகழ் தந்த வள்ளுவர் பெருந்தகை நாளில், தமிழ் நாடு அரசின் உயரிய விருதான தமிழ்த்தாய் விருது பெறுவதை சிகாகோ தமிழ்ச்சங்கம், வரலாற்றுச் சிறப்பு நிகழ்வாக, மிகவும் பெருமை கொண்டு மகிழ்கிறது. நன்றி பாராட்டுகிறது.

இந்தத் தமிழ்த் தாய் விருது என்பது, சிகாகோ தமிழ்ச்சங்கம் அமைத்த முன்னோடிகள், தமிழ் மொழி, மக்கள்-தொண்டு என்பதையே மனதில் கொண்டு, சங்க வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், முன்னாள் செயற்குழு உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோரின் அரிய உழைப்பிற்கு கிடைத்த அங்கீகாரம் என்பதனை, சங்கத்தின் இந்நாள் செயற்குழு சார்பாகப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– சிகாகோ தமிழ்ச்சங்கம்**






## சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம்

சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா, ஜனவரி 25, 2020 ஆம் நாளில், 'பறையும்-பரதமும்' கலந்த நிகழ்ச்சிகளுடன், கைச்சிலம்பம், சிலம்பாட்டம் முதலான கலைகளுடன் பாரம்பரிய முறையில் நடைபெற்றது. ஆம்பலாப்பட்டு-குறிச்சி ஏரி புனரமைப்புக்கு, சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம் நிதியுதவி அளித்ததோடு, தாயகத்திலுள்ள குழுவுடன் இணைந்து, 'தாய்மடி' எனும் மரப்பண்ணை அமைக்கவும் உறுதுணையாய் இருந்தது. சங்கத்தின் இதழான 'மல்லிகை மலர்', வரும் தமிழ் வருடப்பிறப்பன்று, மூன்றாவது ஆண்டு வெளியீடாக வெற்றிகரமாக வெளிவர உள்ளது.





## மிசௌரி தமிழ்ச்சங்கம் பொங்கல் விழா 2020

மிசௌரி தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா, 2020 பிப்ரவரி 22 ஆம் நாளில், ரைட்னர் உயர்நிலைப் பள்ளி அரங்கத்தில் "தமிழ் இனி மெல்லச் சீறும்" என்ற கருத்தை முன்வைத்து மிகச் சிறப்பாக அரங்கேறியது. மிசௌரி தமிழ்ப் பள்ளி மாணவ மாணவியரின் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கீழடி முதல் சந்திராயன் வரை என்ற தலைப்பில் தமிழர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய விளக்கங்களும் சிறப்பாக நடித்துக் காட்டப்பட்டன. தமிழ் மொழி, தமிழர் நாகரிகம், கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணம் இந்நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன. குறிப்பாகப் பாரம்பரிய சிறுதானியங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட மதிய உணவு மற்றும் இரவு உணவு, மிகவும் கவனத்துடன் தயாரிக்கப்பட்டு அன்பு கலந்து விழாவிற்கு வந்த அனைவருக்கும் வழங்கப்பட்டது. "இயற்கையைக் காப்போம்" என்ற கருத்தினை முன்னெடுத்துச் செல்லும் விதமாக, சங்க விருந்தினர்கள் அனைவரையும் தங்கள் வீட்டிலிருந்து மறுசுழற்சி முறையிலான குடிநீர்க் குப்பிகளை கொண்டுவருமாறு வேண்டுகோள் வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி முழுவதும் மறுசுழற்சி முறையில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் கொண்டே நடத்தப்பட்டது. விழாவில் யானை எவ்வாறு இயற்கையை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்ற தலைப்பில் ஒரு முக்கிய செய்திப்படம் ஒளிபரப்பப்பட்டு யானைகளின் முக்கியத்துவம் உறுப்பினர்களுக்கு உணர்த்தப்பட்டது. இறுதியாக பில்டிங் -18 எனப்படும் குழுவினரின் நகைச்சுவை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

9. நெல்லும் உயிர்அன்றே நீரும் உயிர்அன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் அதனால் யான்உயிர் என்பது அறிகை - என்று "மக்களுக்கு உயிராக அமைவது நெல் முதலிய உணவுப் பொருள்கள் அல்ல, நீரும் அல்ல. மண்ணை ஆளும் மன்னன்தான் மக்களுக்கு உயிர் ஆவான். இதை அறிவது, வேந்தனின் கடமை ஆகும்" - என 'நன்னடை நல்கல்' கடமையை மன்னர்க்குக் கூறிய புலவர் யார்?

அ) மோசி கீரனார். ஆ) கபிலர் இ ) ஔவையார் ஈ) பொன்முடியார்





## ஹாரிசுபர்க் வட்டாரத் தமிழ்ச்சங்கம் – தமிழர் திருநாள்

ஹாரிசுபர்க் வட்டாரத் தமிழ்ச்சங்கம்(HATS) ஏற்பாடு செய்திருந்த தமிழர் திருநாள், உழவர் திருநாளாம் தைப்பொங்கல் விழா, 02/29/2020 அன்று வெகு விமரிசையாக, சிறப்பாக நடைபெற்றது. அந்நாளில், பல்வேறு கலை நிகழ்ச்சிகளான பறை இசை, புரவி ஆட்டம் மற்றும் முளைப்பாரி ஊர்வலம், சிறுவர்கள் நடனம், பாடல் பாடுதல், ஆடவர் நடனம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன. அத்துடன் தலை வாழை இலையில் 16 விதமான சுவையான சைவ உணவு வகைகள் பரிமாறப்பட்டன. 450-க்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் இவ்விழாவில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.




## வட கரோலினா தமிழ்ச்சங்கம் – பொங்கல் விழா



வட கரோலினா தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா, சனவரித் திங்கள் 25 ஆம் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆண்டு, திறந்த வெளியில் பொங்கலிட்டு, பெண்கள் மற்றும் சிறுமியரின் கும்மி, கலைஞர்களின் பறை, சிலம்பம் மற்றும் நாட்டுப்புற நடனங்களுடன் சிறப்பாகக் கொண்டாடினோம். அவரவர் மண்ணின் மணத்தையும், உற்றார் உறவினர்களுடன் கூடிப் பொங்கலிட்ட இனிய நினைவுகளையும் மீட்டுத் தரும் வகையில் இந்த விழா அமைந்தது. இது மட்டுமல்லாது, பட்டிமன்றம், சிலம்பம், யோகா மற்றும் வர்மக்கலை, நாடகம், பொம்மலாட்டம், பரதம், மெல்லிசை மற்றும் நடன நாட்டிய நிகழ்ச்சிகள் என்று பல்வேறு விதமான நிகழ்ச்சிகளை சங்க உறுப்பினர்கள் திறம்பட நடத்திக்காட்டினர். இம்முறை புதிய முயற்சியாக, அனைத்துத் தரப்பு அமைப்பினருக்கும், பிற சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு அவர்களும் கலந்துகொண்டது மனமகிழ்ச்சியையும் ஒற்றுமை உணர்வையும் மேம்படுத்தியது. விழாவில் தை மாதத்தைத் தமிழ்ப் பண்பாட்டு மாதமாக அறிவித்து வெளியிடப்பட்ட வடகரோலினா ஆளுநர் அவர்களின் கடிதம் வாசிக்கப்பட்டது. விழாவில் சிறப்பு விருந்தினராக செனட்டர் வைலி நிக்கேல் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு தன்னார்வத் தொண்டர்களின் சளைக்காத ஒன்றுபட்ட உழைப்பினால், இந்தப் பொங்கல் விழா வெற்றிகரமாக நடந்து முடிந்தது.






10. "யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான், உலகமும் கெடுமே" – விளைந்த நெல்லை கவளமாக உருட்டி யானைக்கு தரும்போது மிகச்சிறிய அளவு நிலத்தில் விளையும் நெல்லும் அந்த யானைக்குப் பலநாள் உணவு தருவதற்குப் போதும். ஆனால் அந்நிலத்தில் யானையைப் புகுந்து மேய விட்டால் காலில் மிதிபட்டு அழியும் நெல்லே அதிகமாக இருக்கும். அளவுக்கு மிஞ்சி வரிவிதித்து உன் ஆட்களால் மக்களை வருத்தி நீ பொருள் பெறுவதும் இதைப்போன்ற செயல்தான்" என்று பிசிராந்தையார் பாடி உணர்த்திய மன்னர் ..

அ) நெடுஞ்செழியன் ஆ) பூதப்பாண்டியன் இ) பெருங்கிள்ளி ஈ) அறிவுடைநம்பி.

## மாநகர மில்வாக்கி தமிழ்ச்சங்கம் – பொங்கல் விழா

மில்வாக்கி மாநகரத் தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா, பிப்ரவரி மாதம் 8 ஆம் நாளில் "தமிழர் திருவிழாவாக" மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுவையான தித்திக்கும் பொங்கலுடனான மதிய உணவுடன் விழா ஆரம்பிக்கப்பட்டது. விஜய் தொலைக்காட்சி "ஜோடி நம்பர்-1 வெற்றியாளர்" திரு. அமுதவாணன் அவர்களின் பலகுரல், நடனம் மற்றும் விஜய் தொலைக்காட்சியின் "மாத்தியோசி" நிகழ்ச்சிகள், மக்களை வெகுவாகக் கவர்ந்தன. சிகாகோ புகழ் "பொன்பறை" குழுவின் பறையாட்டம், நம் தமிழரின் மரபுக்கலையான பறையிசையை, மில்வாக்கி மக்களிடையே அதிரடியாக அரங்கேற்றியது. விழாவின் நிறைவாக, சிகாகோவின் "ஸ்வராலயா" மற்றும் "சிகாகோ ராகம் இசைக்குழுவினரின்" இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில் 1960 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு பாடல்கள் வரை இசைக்கப்பட்டன. விழாவில் மில்வாக்கி மாநகரத் தமிழ்சங்கத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.










## பாரதி கலை மன்றம், ஹூஸ்டன்

பாரதி கலை மன்றம், மாதந்தோறும் பல்வேறு நிகழ்வுகளை ஹூஸ்ட்டன்-வாழ் தமிழ் மக்களை மகிழ்விக்க நடத்தி வருகிறது. அக்டோபர் 12 ஆம் நாளில், மன்றமும் மீனாட்சி தியேட்டர் இணைந்து நடத்திய "மகாரதி" என்னும் கர்ணன் நாடகம், சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் முதியோர் வரை மூன்று மணி நேரம் இருக்கையை விட்டு நகர விடாமல் கட்டிப் போட்டு வைத்தது. அதே மாதம் 20 ஆம் தேதியன்று கண்ணொளி கொடுக்கும் சங்கர நேத்திராலயாவிற்கு வயலின் கானமிசைத்து நிதி திரட்டும் நிகழ்ச்சியான லால்குடி கிருஷ்ணன் மற்றும் விஜயலட்சுமியின் வயலின் இசை நிகழ்ச்சியை வழங்கியதில், பாரதி கலை மன்றம் பெருமிதம் கொள்கிறது. நவம்பரில் ஹூஸ்டன் பெருநகருக்கு வருகை தந்த தமிழகத் துணை முதலமைச்சர் மாண்புமிகு. திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களை, வரவேற்று இரவு விருந்தளித்துச் சிறப்பிக்கும் விழாவில் மன்றமும் பங்காற்றியது. டிசம்பரில், பாரதி கலை மன்றத்தின் 45 ஆம் ஆண்டு விழா மலருடன், தீபாவளிச் சிறப்பிதழாக "தமிழ்ச்சாரல்" இதழ் வெளியிடப்பட்டது. 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் பொங்கல் சிறப்பு நிகழ்வுகளாக, பேராசிரியர். கு. ஞானசம்பந்தம் அவர்களின் தலைமையில் நகைச்சுவை பட்டிமன்றத்தையும், 25 ஆம் தேதியன்று பல்கலை நிகழ்ச்சிகளுடன் பொங்கல் விழாவையும் பாரதி கலை மன்றம் மிகப் பிரம்மாண்டமாக நிகழ்த்தியது.





11. போர் செய்வதில் அதிகமாக விருப்பம் கொண்டவனான மன்னன் நெடுஞ்செழியனை "நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருக; தட்டோர் அம்ம இவண்தட் டோரே; தள்ளா தோர்இவண் தள்ளா தோரே" – பகைவரை வென்று அவரை சிறை செய்வதைவிட, மழையால் பெருகும் நீரை ஏரிகளிலும் குளங்களிலும் சிறைப்படுத்துவதே (தேக்குவதே) ஒரு நாட்டிற்கு நலம் பயக்கும்' என்று பாடித் திருத்திய புலவர்?

அ) இடைக்காடனார் ஆ) ஒதலாந்தையார் இ) உருத்திரனார் ஈ) குடபுலவியனார்.



## ரோட் ஐலண்ட் தமிழ்ச்சங்கம் - தைப் பொங்கல் திருவிழா

பொங்கல் திருநாளை முன்னிட்டு, ஜனவரி மாதம் 19 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று, கிரான்ஸ்டன் பள்ளி வளாகத்தில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் ரோட் ஐலண்ட் தமிழ்ச்சங்கத்தின் தைப் பொங்கல் திருவிழா சிறப்பாக நடந்தது. தமிழர் திருநாள் சிறப்பம்சங்களாக, மணக்கும் மல்லிகைப் பூவும், தித்திக்கும் கரும்பும், வாழை இலை விருந்து மற்றும் நம் பாரம்பரிய பறை இசையும் ரோட் ஐலண்ட் தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதுமட்டுமின்றி இயல், இசை, நாடகம் எனச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சுவையார்வத்துடன் பங்கேற்று பொங்கலைக் கோலாகலமாகக் கொண்டாடினர்.



## மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம் - மாபெரும் பொங்கல் விழா

மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், 9000-க்கும் மேற்பட்டவர்கள் திரளாகக் கலந்து கொண்ட பொங்கல் விழா, மிகவும் கோலாகலமாக சனவரி 18, 2020 அன்று கொண்டாடப்பட்டது. பசு, கன்று, ஆடு மற்றும் கட்டிக்கரும்புடனும், மேடையருகில் பொங்கல் வைத்து, 'பொங்கலோ பொங்கலெனக்' குலவையுமிட்டும் அனைவரும் மகிழ்ந்தனர். மாட்டு வண்டி, குடில் மற்றும் கரும்புடன் கூடிய அலங்காரப் புகைப்பட நிலையமும் அமைத்து உறுப்பினர்களுக்குக் குடும்பப் படங்கள் எடுத்துப் பகிரப்பட்டன. விழாவில் முக்கிய விருந்தினராக ஃப்ரிஸ்கோ (Frisco) நகர மேயர் திரு. ஜெஃப் செனய் (Mr. Jeff Cheney), தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி, சட்டையில் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கலை நிகழ்சிகள், குழந்தைகளுக்கான பேச்சுப் போட்டி, 40 குழந்தைகள் பங்குபெற்ற சதுரங்கப் போட்டி, கயிறு இழுத்தல் மற்றும் உறியடித்தல் போன்ற விளையாட்டுகளும் இடம்பெற்றன. குழந்தைகளின் படைப்புகள் புத்தகமாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டன. டாலஸ் மாநகரில் உள்ள அனைத்துத் தமிழ்ப் பள்ளிகள் மற்றும் புறநகர்ப் பகுதி வாழ் தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் அணிவகுப்பும் நடைபெற்றது. 250-க்கும் மேற்பட்ட பெண்கள் கண்டாங்கி சேலை கட்டி, குழந்தைகளுடன் இணைந்து, கும்மிப்பாடலுக்கு ஆடியதும், அதன் முடிவில் விழாவிற்கு வந்த அனைத்துப் பெண்களும், குழந்தைகளும் களத்தில் இறங்கிக் கும்மியடித்து ஆடியதும் கண்டு அரங்கமே ஆர்ப்பரித்தது. கலைமாமணி பேராசிரியர் திரு. ஞானசம்பந்தன் தலைமையில், "மக்கள் அதிகம் மகிழ்வாக இருப்பது - வீட்டிலா? வெளியிலா?" எனும் தலைப்பில், நகைச்சுவையும் கருத்தாழமும் மிகுந்த பட்டிமன்றமும், பாடகர் தீபக் அவர்களின் பாடல் நிகழ்ச்சியும் இடம்பெற்றன. தன்னார்வலர்கள் இணைந்து தயாரித்த உணவை எல்லோரும் உண்டு மகிழ்ந்தனர். விழாவில் கலந்துகொண்ட அனைத்துக் குடும்பத்தாருக்கும் முழுக்கரும்பு பொங்கல் பரிசாக வழங்கப்பட்டது. தமிழகப் பள்ளிகளில், தமிழ்ப் பாடம் படிப்பதை ஊக்குவிக்கும் தமிழாசிரியர்களைப் பெருமைப்படுத்தி உற்சாகப்படுத்தும் விதமாக, 12 ஆம் வகுப்பில் கோவை மாவட்ட அளவில் தமிழில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் இரா. சந்தோஷின் ஆசிரியை திருமதி ர.பிரேமலதா அவர்களுக்கு 'தமிழ் ஒளி விருது' அளித்து பெருமை அடைந்தது மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம்.









12. இளந்தத்தன் என்ற புலவரை ஒற்றன் எனக் கருதி, மன்னன் நெடுங்கிள்ளி கொல்ல முடிவு செய்தபோது, 'வடியா நாவின் வல்லாங்குபாடி...' என்ற பாடலின் வாயிலாக, புலவர்கள் என்பார், 'கிடைத்ததற்கு மகிழ்வோம். பெரிய சுற்றத்தார் அனைவருக்கும் உணவு தருவோம். நாளைக்கு வேண்டுமே என்று ஒதுக்கி வைக்காமல் உண்டு, பதுக்கி வைக்காமல் மற்றவர்க்கு வாரிக் கொடுத்து வாழுவோம். வள்ளலின் அவையில் கிடைக்கும் பொருளின் அளவுக்காக அல்ல, பரிசிலால் கலைத் திறமையை அளவிடும் மதிப்புக்காகத்தான் இவ்வளவு துன்பமும் படுகிறோம்' என்று புலவர் உயர்வு பாடி இளந்தத்தனைக் காப்பாற்றிய புலவர்?

அ) இடைக்குன்றூர் கிழார் ஆ) சேவூர்க் கிழார் இ) கோவூர் கிழார். ஈ) காரி கிழார்

## கனெக்டிகட் தமிழ்ச்சங்கம்




இவ்வாண்டிற்கான கனெக்டிகட் தமிழ்ச் சங்கத்தின் முதல் செயற்குழுக் கூட்டம், பிப்ரவரி 22 அன்று மிகச் சிறப்பான முறையில் ட்ரம்புல், கனெக்டிகட் பகுதியில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்நிகழ்ச்சியில் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்றனர். சங்கத்தின் தலைவர் திரு ஜயபதி பரமானந்தம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இச்சங்கத்தை மற்றுமொரு புதிய பரிணாமத்தில் எடுத்துச் செல்ல உதவும் வகையில் பல்வேறு செயற்குழுக்கள் மற்றும் அதன் தன்னார்வலர்கள், செயல் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக முன்னாள் தலைவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து கலந்துரையாடல் நிகழ்த்தினர். செயலாளர் அருண் காளிமுத்து அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். சுவையான உணவுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## மினசோட்டாத் தமிழ்ச்சங்கம் - பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் தினக் கொண்டாட்டம்





மினசோட்டாத் தமிழ்ச்சங்கம், பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாடும் விதமாக "சங்கமம்" விழாவினை, கடந்த சனவரி 18 ஆம் நாளில் கொண்டாடி மகிழ்ந்தது. சுமார் 850-க்கும் மேலானவர்களுக்குச் சுவைமிகுந்த, விலையில்லா மதியப் பொங்கல் விருந்து படைக்கப்பட்டது. மினசோட்டா மாகாண வரலாற்றில் முதல் முறையாக ஒரு இனத்தின் மொழிக்காகவும், மரபிற்காகவும் மினசோட்டா மாநில ஆளுநர் திரு.டிம் வால்ஷ் கையெழுத்திட்ட பிரகடனம், விழா மேடையில் அறிவிக்கப்பட்டது. மினசோட்டாத் தமிழ்ச்சங்கம் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் இணைந்து தயாரித்த தமிழரின் 'வரலாற்றுக்கால வரிசை' என்ற புத்தகம், சங்கமம் மேடையில் வெளியிடப்பட்டது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை பங்கு கொண்ட சிலம்பம், பறை, தமிழ் இசைக்கருவிகள் முழங்க, ஆடல், பாடலுடனான அருமையான கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. கடந்த பிப்ரவரி 22 ஆம் நாளில், மினசோட்டாப் பள்ளி மாணவர்கள் சுமார் 400 பேர் பங்கு பெற்ற மினசோட்டாத் திருவிழாவில் தங்கள் படைப்புகளைக் காட்சிப்படுத்தி அனைவரின் பாராட்டையும் பெற்றனர். உலகத் தாய் மொழி தினத்தை கொண்டாடும் விதமாக தொடர்ந்து 8 ஆவது ஆண்டாக, குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கி, சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தோம்.

## சார்லட் தமிழ்ச்சங்கம்



வாழ்க தமிழ்! வளர்க தமிழர் பண்பாடு! என்ற ஒருமித்த சிந்தனையோடு பிரமாண்டமாக அரங்கேறியது சார்லட் தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா. வண்ண, வண்ண ஆடை அணிகலன்களின் அணிவரிசை, பாரம்பரிய உணவிலிருந்து, நவீன பண்டங்கள் வரை நிறைந்து ஈர்த்த உணவுகள், எனத் திரும்பிய பக்கமெல்லாம் கோலாகலக் கொண்டாட்டமாகக் காட்சியளித்தது பொங்கல் விழா அரங்கு. தமிழரின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையில் அடுத்த தலைமுறையினர் காட்டிய ஆர்வம், பல்வேறு கலைநிகழ்ச்சிகளாக மேடையை அலங்கரித்தன. ஓங்கி ஒலித்தது ஓங்கு பறைக் குழுவினரின் கம்பீரமான பறை மற்றும் நாட்டியம். அரசி நகரத் தமிழ்ப் பள்ளிக் குழந்தைகள் ஆடிய கோலாட்டமும், அரங்கேற்றிய வாள் சண்டையும் கண்கவரும் வண்ணம் அமைந்திருந்தன. செக்கு எண்ணெயின் மணம் கமழ, பண்டைய தானிய வகைகளில் சமையற் போட்டி, கோலப்போட்டி எனப் பல போட்டிகளில் பல்வேறு தரப்பினரும் பங்குபெற்று பல பரிசுகளையும் தட்டிச் சென்றனர். மேலும் வரவிருக்கும் சித்திரைத் திருவிழாவை எப்படிச் சிறப்பிக்கலாம் என்று இப்போதே மகிழ்வுடன் எதிர்நோக்கியுள்ளது இளம் தமிழர் பட்டாளம்.

13. தான் வறுமையில் வாடியபோதும், தன்னைக் காணாமல், தன் கவிதையைக் கேளாமல் பரிசிலை மட்டும் மன்னன் அனுப்பியபோது, அந்தப் பரிசிலைப் பெற்றுக்கொள்ள மறுத்து, "காணாது ஈத்த இப் பொருட்கு யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லென்" என்று "நான் ஒரு சொல் வியாபாரி அல்லன்" எனப் பாடிய புலவர் யார்?

அ) பெருஞ்சாத்தனார் ஆ) பெருங்கண்ணனார் இ) பெருவழுதி ஈ) பெருஞ்சித்திரனார்.



# அமெரிக்காவில் தமிழரின் பாரம்பரிய விளையாட்டு – கபடி

தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான கபடி, மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம் சார்பில் நடத்தப்பட்ட பொங்கல் விழாவில், பல்வேறு கபடி குழுக்களிடையே விளையாட்டுப் போட்டியாக மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. டாலஸ் மாநகரைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலிருந்தும், பிற நகரங்களிலிருந்தும் கபடிக் குழுக்கள், அமெரிக்காவில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட கபடிப் போட்டியில் கலந்து கொண்டனர். பொங்கல் கொண்டாட்டத்திற்கு முந்தைய நாள் ஆண்களின் கபடிப் போட்டிக்கான தொடக்க ஆட்டங்கள் பல அணிகளுக்கு இடையே நிறைவேறியது. பொங்கல் கொண்டாட்டத்தின் உச்சக்கட்டமாக, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கபடி இறுதிச் சுற்று, அனைத்து பார்வையாளர்களின் முன்னிலையில் நடந்தேறியது. பெண்கள் மற்றும் ஆண்கள் கபடிப் போட்டிக்கு முதல் பரிசாக தலா 1000 அமெரிக்க டாலர்களும், இரண்டாம் பரிசாக தலா 500 அமெரிக்க டாலர்களும் வழங்கப்பட்டன. இதில் ஆண்கள் கபடிப் போட்டியில் முதலிடம் வென்ற 'இர்விங் தமிழ் தலைவாஸ்' அணியும்,



FRISCO
PROGRESS IN MOTION

PROCLAMATION

**WHEREAS,** kabbadi is an extremely popular sport in the Indian subcontinent. The game was traditionally played in villages and schools, but India has been credited with having helped to popularize kabaddi as a competitive sport, with the first organized competitions occurring in the 1920s. It became a part of the Indian Olympic Games in 1938 and was added to the Asian Games program in 1990; and

**WHEREAS,** home to multiple professional sports teams, national and international athletic organizations, and world-class facilities, Frisco has been coined "Sports City-USA". As the City has grown and become more diverse, it is now appropriate to welcome the introduction of a new sport and to recognize its importance to the culture and heritage of our Indian American community.

**WHEREAS,** since 2018, the month of January has been celebrated as "Tamil Heritage Month" in Frisco, and our Indian American community also celebrated the Tamil Thanksgiving Festival. To further enhance the festivities, Metroplex Tamil Sangam is hosting the very first kabbadi tournament in Frisco at Comerica Center on January 18th.

**NOW, THEREFORE,** I Jeff Cheney, Mayor of the City of Frisco, Texas do hereby proclaim January 18th, 2020 as:

"INTERNATIONAL KABBADI DAY"

in Frisco, and wish the players and organizers of this great event much luck and success.

Jeff Cheney
Mayor

இரண்டாம் இடம் வென்ற 'ஹூஸ்டன் பாரதி கலை மன்றம்' அணியும் தங்களின் பரிசுத் தொகையை ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க அன்பளிப்பாக வழங்கியது பெருமைப்படத்தக்கது.

விழாவில் பங்கேற்று சிறப்பித்த ஃப்ரிஸ்கோ (Frisco) நகர மேயர் திரு. ஜெஃப் செனய் (Mr. Jeff Cheney) அவர்கள், சனவரி 18, 2020 தினத்தை ஃப்ரிஸ்கோவின் சர்வதேச கபடி தினமாக அறிவித்து அரசு ரீதியிலான பொது ஆணையை அதிகாரப் பூர்வமாக வெளியிட்டு, அமெரிக்க வாழ் இந்தியர்களுக்குத் தாம் என்றும் நண்பனாக இருந்து, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான நல்லுறவு வளர்க்க உறுதுணையாக இருப்பேன் என்று உறுதியளித்தார்.

இது போன்ற கபடிப் போட்டிகளை அமெரிக்காவின் மற்ற மாநிலத்தவரும், பிற வெளிநாட்டுத் தமிழ்க் குழுக்களும் ஆங்காங்கே நடத்தி, உள்ளூர் அரசு ஆளுமைகளின் மூலம் தகுந்த ஆதரவைப் பெற்று, இந்த கபடி விளையாட்டை உலக அளவிலான ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறச்செய்ய முன்னெடுக்குமாறு, அனைத்து தமிழர்களின் சார்பாக மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச்சங்கம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.



14. குறைந்த அடிகளைக் கொண்ட வெண்பாக்களால், அறம், பொருள், இன்பம் பற்றி ஐம்பது முதல் ஐந்நூறு செய்யுட்களைக் கொண்டு இயற்றப்படுவது...

அ) குறுந்தொகை ஆ) ஐங்குறுநூறு இ) மேல் கணக்கு ஈ) கீழ்க்கணக்கு.






## ஜாக்சன்வில் தமிழ் மன்றம் – கிராமியப் பொங்கல் திருவிழா

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை, அமெரிக்காவில் ஜாக்சன்வில் மாநகரத்திலே ஜா.த.ம செயற்குழு 2020 விகாரி வருடம், தை மாதம் 11 ஆம் நாள் (25/01/2020) அன்று போல்ஸ் நடுநிலைப் பள்ளியில் மிகவும் கோலாகலமாக, 'கிராமியப் பொங்கல் திருவிழா' என்ற தலைப்பில் கொண்டாடியது. இந்தப் பொங்கல் நிகழ்ச்சி, நமது தாய்மண்ணின் மணத்தோடு, வாசலில் கோலமிட்டு, பொங்கலிட்டு நமது பாரம்பரிய பறை இசை மற்றும் கும்மி ஆட்டத்தோடு மிக இனிதாக நடைபெற்றது. வாசலுக்கு வந்து வரவேற்ற மல்லிகை மணம், கரும்பும் மற்றும் இனிப்பு-காரம் எனத் தொடங்கி, கிராமத்துப் பின்னணியில் படமெடுத்து, அன்போடு தமிழ் உள்ளங்களை வரவேற்று அமரவைத்து நெகிழ்வான பாசத்தோடு கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாக, விதவிதமான நிகழ்ச்சிகள் தந்து மகிழ்வித்தது இவ்விழா. விழாவின் முடிவில், செயற்குழுவின் அன்பையும் விருந்தையும் வாழையிலையிலிட்டுத் தமிழ் உள்ளங்களைத் திக்குமுக்காடவைத்த இனிப்பான பொங்கலாய் இவ்வருடப் பொங்கல் விழா அமைந்தது.







## பனை நிலம் தமிழ்ச்சங்கம் – பொங்கல் விழா

பனை நிலம் தமிழ்ச்சங்கத்தின் பொங்கல் விழா, ஜனவரி 26, 2020 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அனைத்து மகளிர் உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் முக்கிய நிகழ்வு இது என்பதால் மிகச் சிறப்பாக அமைந்தது. தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கிய விழாவில் சார்ல்ஸ்டன் பனை நில தமிழ்சங்கத் தலைவர் திருமதி. கமலா ஜான் வரவேற்புரையாற்றினார். விழாவில் திரு.பிரசன்னா அவர்கள் தனது உயிரோட்டமுள்ள சொற்பொழிவின் மூலம் தமிழ் நாட்டின் கிராமங்களில் கொண்டாடப்படும் பொங்கல் திருநாளை, நம் கண் முன் கொண்டு வந்து அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார். குழந்தைகள் நாடகம், நடனம், இசை, பாடல்கள் மூலம் அருமையாக மகிழ்வித்தனர். பார்வையாளர்கள் பங்கேற்ற பலவகையான விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பங்கேற்ற குழந்தைகளுக்கு முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சார்ல்ஸ்டன் வாழ் தமிழர்களால் வீட்டில் பாரம்பரிய முறையில் சுவையாகத் தயாரிக்கப்பட்ட விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

15. சூரிய நாராயண சாஸ்திரி அவர்கள், தமிழ் மேல் கொண்ட பற்றினால் தனது பெயரை, 'பரிதிமாற் கலைஞர்' என மாற்றி வைத்துக்கொண்டார். அவர் எழுதி பெண்ணாக நடித்த நாடக நூல்கள்?

அ) மதிவாணன் ஆ) கலாவதி. இ) ரூபாவதி. ஈ) சித்திரக்கவி






## டென்னசி தமிழ்ச்சங்கம் – தமிழர் திருநாள்

டென்னசி தமிழ்ச்சங்கம், தமிழர் திருநாளாம் பொங்கலை, பிப்ரவரி 1 ஆம் தேதியன்று வெஸ்ட் எண்ட் நடுநிலைப் பள்ளியில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. 165 பங்கேற்பாளர்களுடனும் 500–க்கும் மேற்பட்ட பார்வையாளர்களுடனும் நடைபெற்ற இவ்விழாவை நடிகரும், முன்னாள் மக்களவை உறுப்பினருமான திரு. நெப்போலியன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். டென்னசி தமிழ்ச் சங்கத் தலைவர் திருமதி. கவிதா சரவணனின் வரவேற்புரையுடன் தொடர்ந்த விழாவில் புதுமையான பல்சுவை நிகழ்ச்சிகள் பலவற்றை பங்கேற்பாளர்கள் அரங்கேற்றினர். விழாவின் சிறப்பு விருந்தினராக அட்லாண்டாவிலிருந்து திரு. எழிலன் அவர்கள் வருகை தந்து, வரவிருக்கும் பேரவையின் ஆண்டுவிழா குறித்து உரையாற்றினார். அவ்விழாவில் நாஷ்வில் தமிழ்ச்சங்கமும் ஏனைய தமிழ்ச்சங்கங்களும் எவ்வாறு தங்கள் பங்களிப்பைத் தரவிருக்கின்றனர் என்று விவரித்த அவர், தமிழர் பண்பாட்டை முன்னெடுப்பதில் நாம் செய்ய வேண்டியவை குறித்தும் சிறப்புரையாற்றினார்.

## கேன்சஸ் நகரத் தமிழ்ச்சங்கம் – பொங்கல் திருவிழா



கேன்சஸ் நகரத் தமிழ்ச்சங்கம், 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் நாளில் நடத்திய பொங்கல் திருவிழாவில், கேன்சஸ் நகரத் தமிழ்க் குடும்பங்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இவ்விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், சிறுவர் சிறுமியர்களின் திறமையை வெளிப்படுத்தும் விதமான திருக்குறள் போட்டி, ஓவியப் போட்டி, மாற்றுடைப் போட்டி, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 'எழுத்துக் கோர்வை தேனீ போட்டி' (ஸ்பெல்லிங் பீ), ஆண்களும் பெண்களும் அணிகளாகக் கலந்து கொண்ட பொங்கல் கலாட்டா நிகழ்ச்சி மற்றும் பெண்களுக்கான கோலப்போட்டி, இனிப்பு செய்யும் போட்டிகளும் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டன. சிறுவர்களும் பெரியவர்களும் கலந்து கொண்ட பட்டிமன்றம், 'வாழ்க்கைக்குப் பெரிதும் உதவுவது நட்பா? உறவா?' என்ற தலைப்பில் கலகலப்பாக நடைபெற்றது. மண்பானையில், நமது பாரம்பரிய முறைப்படி பொங்கல் வைக்கப்பட்டது. விழா அரங்கு முழுவதும் பொங்கல் மற்றும் உழவர் தொடர்பான அலங்காரங்கள் செய்யப்பட்டு இருந்தன. விழாவில் பங்கேற்ற அனைத்துச் சிறுவர் சிறுமியருக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. வந்திருந்த அனைவருக்கும், சுவை மிகுந்த வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கலோடு கூடிய அறுசுவை விருந்து வழங்கப்பட்டது. மிகச் சிறப்பாக நடந்த பொங்கல் விழா மகிழ்ச்சியாக நிறைவேறியது.




16. எட்டுத்தொகை நூல்களுள் மூன்றடிகள் கொண்ட அகவல் இடம் பெற்ற நூல் எது?

அ) ஐங்குறுநூறு. ஆ) அகநானூறு இ) குறுந்தொகை ஈ) முத்தொள்ளாயிரம்





## அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம்

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கத்தின் 2020 ஆம் ஆண்டுப் பொங்கல் விழா, பிப்ரவரி 8 ஆம் நாளில், சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களின் தன்னிகரற்ற உழைப்பால் வெகு விமரிசையாக அரங்கேறியது. விடாது பெய்த பனிப்பொழிவிலும் 600-க்கும் மேற்பட்டோர் திரண்டு வந்திருந்தனர். பொங்கலின் சிறப்பம்சத்தைச் சித்தரிக்கும் வகையில் பொங்கல் பானை, வீடு, மாட்டு வண்டி, பூக்கோலம், கரும்பு முதலானவை அரங்கத்தை அலங்கரித்தன. வாழையிலை விருந்துடன் விழா இனிதே தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தமிழின் சிங்காரம், சிறார்களின் செவியில் ரீங்காரமிடத் தமிழ்த் தேனீ போட்டி குழந்தைகளுக்கு நடத்தப்பட்டது. பேச்சாளர் திருமதி சுமதிஸ்ரீ அவர்களின் உற்சாகப் பேச்சு மேலும் பலம் சேர்த்தது. தமிழர் திருவிழாவில், தமிழின் தொன்மையைப் பறைசாற்றும் வகையில், பறையிசை விண்ணையெட்ட, ஆட்டம் களைகட்டியது. சொல்லின் செல்வர் திரு. மணிகண்டன் ஐயா அவர்களின் தலைமையில், "வாழ்க்கை பூந்தோட்டமா? போராட்டமா?" என்ற தலைப்பில் நடைபெற்ற சிறப்புப் பட்டிமன்றத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.



## டெலவர் பெருநிலத் தமிழ்ச்சங்கம் - பொங்கல், கலை நிகழ்ச்சிகள்




அமெரிக்காவின் பென்சில்வேனியா மற்றும் டெலவர் மாநிலங்களில் வசிக்கும் தமிழ் மக்கள் ஒன்று கூடி, டெலவர் பெருநிலத் தமிழ்ச்சங்கம் (TAGDV) சார்பாக, கடந்த பிப்ரவரி 2 ஆம் நாளில், டெலவர் மாநிலத்தின் பி.எஸ். டுபான்ட் நடுநிலைப் பள்ளியில் பொங்கல் வைத்தும் கலை நிகழ்ச்சிகள் நடத்தியும் கொண்டாடி மகிழ்ந்தனர். விழாவில் குழந்தைகள் உட்பட 800-க்கும் மேற் பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். காலை 9:30 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் ஆரம்பித்தன. தமிழ்ச்சங்கம் சார்பாக நடத்தப்படும் மூன்று பள்ளிகளிலிருந்தும், மாணவ மாணவியர்கள், கலை நிகழ்ச்சிகளுக்காகத் தங்கள் ஆடை அலங்காரங்களுடன், அடுத்தடுத்து கலந்துகொள்ள மேடையருகே கூடி நின்றது கண்களுக்கு விருந்தாக இருந்தது. குட்டிக் குழந்தைகளின் கும்மியாட்டம் காண்போரை கும்மாளம் போட வைத்தது. ஆடவர்களும் பெண்களும் ஒயிலாட்டம், கும்மியாட்டம், காவடியாட்டம், கரகாட்டமென அடுத்தடுத்து மேடையை அலங்கரித்த வண்ணம் இருந்தார்கள். அரங்கத்திற்கு வெளியே கோலப்போட்டி மற்றும் சமையல் போட்டிகள் நடத்தப்பட்டன. தமிழர் பண்பாட்டில் ஓர் அங்கமான முளைப்பாரி (முளைப்பாலிகை) நிகழ்ச்சியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் சிறுமியர் பங்கேற்று அரங்கத்தை வலம் வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நிகழ்ச்சியின் நிறைவாக "அமெரிக்கா வந்து அதிகம் மாறி விட்டது ஆண்களா? பெண்களா?" என்ற தலைப்பில், நீயா நானா புகழ் திரு. கோபிநாத் அவர்கள் நடத்திய விவாத மேடை, மிகவும் நகைச்சுவையும், சுவையார்வமும் கலந்து, இவ்விழாவிற்கு முத்தாய்ப்பாக அமைந்தது.

17. “அரும் பெறல் பாவையை அடைக்கலம் பெற்ற இரும் பேர் உவகையின் இடைக் குல மடந்தை..”
– என்னும் பாடல் கூறும் வண்ணம், கண்ணகியை அடைக்கலமாக ஏற்றவர் யார்?

அ) மாதரி. ஆ) மாதவி இ) கவுந்தியடிகள் ஈ) ஐயை

## தமிழ் சிநேகம் – தாம்பா, ப்ளோரிடா




தமிழ் சிநேகம், தமிழர்களின் பெருமை வாய்ந்த தைப் பொங்கல் திருநாளை, கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் நாளில், தாம்பா நகரில் உள்ள லேக் மாஃடலின் பூங்காவில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. இயற்கை அன்னையின் ஆசிர்வாதத்தால் அருமையான தட்ப வெட்பநிலை கொண்ட நாளாக அமைந்த அந்த நாளில், ஆறு குடியிருப்புகளைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் தமது குடும்பத்துடன் தனிக்குழுவாக பொங்கல் பொங்கி மகிழ்ந்தனர். ஏறத்தாழ 550-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இந்த ஆண்டு தைப் பொங்கல் கொண்டாட்டத்தில், அனைவரும் ஆவலுடன் பொங்கல் உண்டு, கரும்பு கடித்து, கூடிப்பேசி, ஆடிப்பாடி, உணவு உண்டு, கிராமிய விளையாட்டுகள் பல விளையாடி மாலையில் விடைபெற்றுச் சென்றனர்.

## ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கம் – திருக்குறள் திருவிளையாடல் போட்டி மற்றும் பொங்கல் விழா




"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்; உள்ளியது உள்ளப் பெறின்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, திருக்குறளை அனைவரும் போற்றிட வேண்டுமென்ற குறிக்கோளுடன் நவம்பர் 8 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 'திருக்குறள் திருவிளையாடல்' போட்டி நடைபெற்றது. சங்க ஆலோசகர் திரு. முத்து நடராசன் அவர்களின் அயராத முயற்சியினால் உருவாக்கப்பட்ட இத்திருக்குறள் போட்டி, வள்ளுவரின் குறளையும் அதன் பெருமையையும் அனைவரும் போற்றிப் புகழ்ந்திடும் வண்ணம் அமைந்திருந்தது. போட்டியின் கேள்விகள், போட்டியாளர்கள் மட்டுமின்றி இவ்விழாவைக் காண வந்திருந்தோரும் பங்கேற்கும் வகையில் சுவையார்வமுள்ளனவாக வடிவமைக்கப்பட்டிருந்தன. போட்டியில் முதலிடம் வென்ற அணிக்கு சுழற்கோப்பையும் பரிசுத்தொகையும், அடுத்த இரண்டு இடங்களை வென்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இதனையடுத்து, 2020 ஆம் ஆண்டின் முதல் விழாவாக, ஜனவரி 11 ஆம் நாளன்று, ஹூஸ்டன் பெருநகரத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் பெருமகிழ்ச்சியுடன் தொடங்கிய தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. தாம்பூலத் தட்டு வரவேற்புடனும், தமிழ்த் தாய் வாழ்த்துடனும் இனிதே ஆரம்பித்த விழாவில், தமிழ்ப் பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளோடு, பெரியவர்களும் பாட்டு, நடனம் மற்றும் ஏனைய கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று விழாவிற்கு அழகு சேர்த்தனர். இல்லத்தரசிகளை ஊக்குவிக்கும் பொருட்டு சுவையான, ஆரோக்கியமான பொங்கல் சமைக்கும் போட்டி நடத்தப்பட்டு, வென்றவர்களுக்குப் பரிசுக்கோப்பைகள் வழங்கப்பட்டன. தமிழர்களின் தலைசிறந்த குணமான விருந்தோம்பலைப் போற்றும் வகையில், விருந்தினர்களுக்குத் தலை வாழை இலையிட்டு, அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. சங்கத்தின் நிறுவனர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களோடு இணைந்து எண்ணற்ற தன்னார்வலர்களின் தன்னலமற்ற பங்களிப்பினால், இவ்வாண்டின் பொங்கல் திருவிழா கோலாகலமாக நடைபெற்று முடிந்தது.

18. "__________ என்னும் பொய்யாக் குலக்கொடி, புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி" எனப் புகழப்படும் ஆறு எது?

அ) பொருணை ஆ) தாமிரபரணி இ) காவிரி ஈ) வைகை.






## நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்கம்

நியூ இங்கிலாந்து தமிழ்ச்சங்கம், இந்த ஆண்டு பிப்ரவரி மாதம், 1 ஆம் நாள், சனிக்கிழமையன்று, தித்திக்கும் பொங்கல் விழாவினை, "மரம் வளர்ப்போம் உழவைக் காப்போம்" என்ற மையக் கருத்துடனும், நம்மாழ்வார் மற்றும் நெல்மணி ஜெயராமன் அவர்களின் நினைவுக் கொண்டாட்டமாகவும் விழாவினை சிறப்பாக நடத்தியது. குழந்தைகளும் பெரியவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். இயல், இசை, நாடகம் என்று அரங்கம் களைகட்டியது. குறிப்பிடத்தக்க விதமாக, இந்த முறை அதிக நாடகங்கள் அரங்கேறியது பெருமை. உணவு அருந்திய அனைத்து உறுப்பினர்களுக்கும் இனிப்புப் பரிசுப் பை வழங்கப்பட்டது. தித்திக்கும் என்ற பெயருக்கு தகுந்தார் போல், விழாவில் கரும்பு வழங்கியதோடு, மணக்கும் மதுரை மல்லிகை பூச்சரமும், சிறப்பு இனிப்புடனான வாழை இலை விருந்தும் வழங்கப்பட்டன.






## சேக்ரமெண்டோ தமிழ் மன்றம் – பொங்கல் திருநாள்

ஜனவரி 25, 2020 சனிக்கிழமையன்று, சேக்ரமெண்டோ தமிழ் மன்றம், பொங்கல் திருநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. அதிகாலையில், கோலப் போட்டியுடன் பொங்கல் பானை வைத்துப் பொங்கல் பொங்கியதோடு விழா துவங்கியது! அழகான கோலங்கள் அனைவரின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டன! எல்லோரும் "பொங்கலோ பொங்கல்" என்று வாழ்த்தி அனைவருக்கும் பொங்கல் வழங்கினார்கள். பட்டிமன்ற நிகழ்விற்காக வந்திருந்த முனைவர் திரு. ஞானசம்பந்தம், திரு மாது, திருமதி சுமதி மற்றும் தமிழரசி ஆகியோர் கோலப் போட்டியின் நடுவர்களாக இருந்து, சிறந்த கோலங்களைத் தேர்வு செய்து பரிசு அளித்தார்கள்! பின்பு நடந்த ஆரவாரமான பட்டிமன்றம், நகைச்சுவையுடன் நல்ல கருத்துக்களை வழங்கி, வந்தவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது! மதியம், தலை வாழை இலையில், 20 வகை உணவுகளுடன் அறுசுவை விருந்து படைக்கப்பட்டது! அதற்குப் பிறகு அனைத்துத் தமிழ்ப் பள்ளி மாணவர்களும் மற்றும் உள்ளூர் தமிழ் மக்களும் கண் கவர் கலை நிகழ்ச்சிகள் வழங்கினார்கள்! மாலைத் தேநீருடன் விழா இனிதே நிறைவுற்றது!





19. வெறுக்கத்தகும் இன்னா இசை இன்றிச் செவிக்கு இனியதாய்ச் செல்லும் இசை?

அ) மெல்லிசை ஆ) ஒழுகிசை. இ) இன்னிசை ஈ) பண்ணிசை





## கனடா தமிழ்ச்சங்கம் - 2 ஆவது தமிழர் மரபு மாநாடு

கனடா தமிழ்ச்சங்கம் சார்பாக, கடந்த பிப்ரவரி 1 ஆம் நாளில் டொரோண்டோவில், 2 ஆவது தமிழர் மரபு மாநாடு-2020, மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அன்று மிக அதிகமாகப் பனிப்பொழிவு இருந்த போதிலும் சுமார் 800-க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாநாட்டினைச் சிறப்பித்தனர். தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்துடன், உலக மக்கள் சமாதானத்திற்காக ஒரு நிமிட மௌனமும் அனுசரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் முதல் பகுதியாகவும் இலக்கிய நிகழ்ச்சிகள் இரண்டாம் பகுதியாகவும் மாநாடு நடைபெற்றது. கனடா தமிழ்ச்சங்கம் மற்றும் தமிழர் மரபு மாநாடு அமைப்புகளின் நிறுவனத் தலைவர் திரு.வள்ளிக்கண்ணன் மருதப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். சிறுமி கம்சாயினி சாந்தகுமார் சிறிய தமிழுரையாற்றினார்.

அடுத்ததாக, திருமதி. ராஜமல்லிகா மோகன்ராஜின் பரதநாட்டியம், திருமதி. ரேணுகா தேவி விக்னேஸவ்ரன் அவர்களின் கலையருவி நாட்டியப்பள்ளியின் மாணவ, மாணவியர்களின் பாரம்பரிய நடனமும், இனிதா நடனக் குழுவினரின் பாரம்பரிய திரையிசை நடனங்களும் இடம்பெற்றன. விஜய் தொலைக்காட்சி புகழ் திரு. அமுதவாணன் அவர்களின் நகைச்சுவை நிகழ்ச்சி கலகலப்பாக நடந்தது. மாநாட்டின் இரண்டாவது பகுதியான இலக்கிய நிகழ்வில், நளினச் சொல் நாயகர் திரு. நாஞ்சில் சம்பத் தலைமை வகிக்க "தமிழர் மரபுகள்" என்ற தலைப்பில் நடைபெற்ற சிந்தனைக் களம் நிகழ்ச்சி, மரபுகளின் முக்கியத்துவத்தைக் குறித்து அனைவரையும் சிந்திக்க வைத்தது.

மாநாட்டின் மணிமகுடமாக 2020 ஆம் ஆண்டிற்கான "தமிழ் மரபு காவலர் விருதுகள்" கனடா ஒண்டாரியோ மாநிலப் பாராளமன்ற உறுப்பினர் திரு. லோகன் கணபதி முன்னிலையில் விருதுகள் வழங்கப்பட்டன. நிறைவாக மாநாட்டின் தலைவர் திரு. வள்ளிக்கண்ணன் மருதப்பன், நிகழ்ச்சியின் வெற்றிக்கு உழைத்த தன்னார்வு தொணடர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், அனுசரணை வழங்கிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொண்டு விழாவினை நிறைவு செய்தார்.







## பொஸ்ரன் தமிழ்ச்சங்கம் - பொங்கல் விழா

பொஸ்ரன் தமிழ்ச்சங்கம், தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவினை கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாகக் கொண்டாடி வருகின்றது. 2020 ஆம் ஆண்டின் பொங்கல் விழா கடந்த ஜனவரி 11, சனிக்கிழமையன்று சிறப்பாக நடந்தது. சங்க உறுப்பினர்கள் தங்கள் இல்லங்களிலிருந்து செய்து கொண்டு வந்த பல வகையான பொங்கல் வகைகளை அனைவரும் சுவைத்து மகிழ்ந்தனர். நமது குழந்தைகளுக்கு, பார் முழுவதும் பரவியிருக்கும் தமிழர்தம் மரபுச் செய்திகளையும், தமிழர் விழாக்களையும் அறியச்செய்திட, இத்தகைய கொண்டாட்டங்களை நடத்துவதில் பொஸ்ரன் தமிழ்ச்சங்கம் மிகவும் பெருமை கொள்கிறது.

20. உப்பு வாணிகம் செய்த மக்களின் பெயர் யாது?

அ) கோசர் ஆ) பரணர் இ) உமணர். ஈ) கொங்கர்







## கொலம்பஸ் தமிழ்ச்சங்கம் - தமிழர் திருநாள் கொண்டாட்டம்



கொலம்பஸ் தமிழ்ச்சங்கம், 2020 ஆம் ஆண்டு தமிழர் திருநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடியது. பிப்ரவரி 8 ஆம் நாளில் நடந்த இவ்விழாவில், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், சிறுவர்களுக்கான உறியடி மற்றும் அலங்கார ஆடை அணிவகுப்பு, ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் எனப் பலவும் சிறப்பாக நடந்தன. இவ்விழாவை முன்னிட்டு, பெரியவர்களுக்கான கோலப்போட்டி, சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி நடத்தி, அதற்கான பரிசுகளும் இம்மேடையில் வழங்கப்பட்டன.

கடந்த டிசம்பர் திங்களில் நமது சங்கம், 'கனெக்டிகட் மானுடம்' பறைக் குழுவினரை கொலம்பஸிற்கு வரவழைத்து, பறை இசைப் பயிலரங்கினை நடத்தியது. இதில் பறை பயின்ற 'கொலம்பஸ் பரிதி' பறைக் குழுவினர் பொங்கல் விழாவில் வழங்கிய பறையிசை நிகழ்ச்சி, வந்திருந்த அனைவரின் மனதையும் கவர்ந்தது. வயதை மறந்து, கூச்சம் துறந்து அனைவரும் அரங்கத்தில் ஆடி மகிழ்ந்தனர்.






## சியாட்டெல் தமிழ்ச்சங்கம் - பொங்கல் விழா

அமெரிக்காவின் வாஷிங்டன் மாநிலம், சியாட்டெல் நகரில், சியாட்டெல் தமிழ்ச்சங்கத்தினரால் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நகரின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தமிழ்க் குடும்பத்தினர்கள் மிகுந்த உற்சாகத்துடன் விழாவில் கலந்துகொண்டனர். விழாவில் சிறுவர்களுக்கும், பள்ளி மாணவ மாணவியருக்கும், பெரியவர்களுக்கும் பல போட்டிகள் நடத்தப்பட்டன. திருக்குறள் ஒப்புவித்தல், சொல்வது எழுதுதல், தமிழ் வாசித்தல், கட்டுரை எழுதுதல், பேச்சுப் போட்டி முதலிய போட்டிகள் நடத்தப்பட்டன. பெரியவர்களுக்குத் தமிழ் இலக்கியம் மற்றும் பாரம்பரியம் சார்ந்த விநாடி வினா, கோலப்போட்டிகள் நடத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து, மாணவர்களின் ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகள் மற்றும் தமிழ் நாடகமும் அரங்கேறியது. போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும், வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. விழா நிகழ்ச்சிகளை, சியாட்டெல் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். சிறுவர்களும் மாணவ, மாணவியரும், பெரியவர்களும் பாரம்பரிய உடையுடன் விழாவில் கலந்துகொண்டனர். விழாவானது, அனைத்து தமிழ்க் குடும்பத்தினரின் சந்திப்பு நிகழ்ச்சியாகவும் வளரும் தலைமுறைக்கு தமிழ்ப் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கொண்டு சேர்க்கும் விதமாகவும் அமைந்திருந்தது மகிழ்வான செய்தி ஆகும்.

21. பத்துப்பாட்டில் கடையெழு வள்ளல்களின் வரலாறு கூறும் பாட்டு எது?

அ) சிறுபாணாற்றுப்படை. ஆ) பெரும்பாணாற்றுப்படை இ) முல்லைப்பாட்டு ஈ) குறிஞ்சிப்பாட்டு உ) மலைபடுகடாம்



## மத்திய இல்லினாய்ஸ் தமிழ்ச்சங்கம்

மத்திய இல்லினாய்ஸ் தமிழ்ச்சங்கம் சார்பில், பிப்ரவரி 29 ஆம் நாளில், பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சங்க அங்கத்தினர்கள், பாரம்பரிய உடையில் கலந்துகொண்டு, தமது இல்லங்களிலிருந்து சமைத்துக் கொணர்ந்த உணவை அனைவருடனும் பகிர்ந்துண்டு மகிழ்ந்ததோடு, பொங்கல் திருவிழாவின் சிறப்புப் பற்றிக் கலந்துரையாடினர். எங்கள் சங்கத்தின் நாட்டுப்புற பாடகர் சேது ராமகிருட்டிணன், அவ்வப்போது பாடல்கள் பல பாடி, அனைவரையும் உற்சாகப்படுத்தினார். இந்த ஆண்டு பொங்கல் விழாவில், திருக்குறள் போட்டி ஓர் சிறப்பம்சமாக அமைந்தது. அன்றாட வாழ்வியலில் திருக்குறளின் வழி காட்டுதலை ஆர்வப்படுத்தும் வகையில் போட்டிக்கான குறள்கள் தேர்வு செய்யப்பட்டன. குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து, குறள் மற்றும் அதன் பொருள் விளக்கம் கூறும் வகையில் போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் பேரார்வத்துடன் பங்கு பெற்று, பரிசுகளை சங்க அங்கத்தினர் தட்டிச்சென்றனர்.




## போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றம் – அய்யனாருடன் கிராமத்துப் பொங்கல்

போரட்லண்ட் மாநகரத்தமிழ் மன்றத்தின் பொங்கல் திருவிழா, பிப்ரவரி 15, 2020 ஆம் நாளன்று, சுமார் 750 தமிழ் உறவுகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 12 அடி உயர பிரம்மாண்ட அய்யனார் உருவச்சிலையும், ஐந்திணைகளை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) நினைவூட்டும் பெரிய தூரிகைகளும், வாழையிலை தோரணத்தில் புகைப்படச் சாவடியும், மற்றும் அழகிய அலங்கார வேலைப்பாடுகளும் நமது பாரம்பரிய கிராமத்து பொங்கலைப் பிரதிபலித்தது! விழாவில் கலந்து கொண்ட சுமார் 750 விருந்தினர்களுக்கு, மதிய உணவாக, சிறப்பு வாழை இலை விருந்து, மகிழ்வாகவும் மனதிற்கு நிறைவாகவும் வழங்கப்பட்டது. பந்தியின் போது 30 நிமிடங்களுக்கு ஒருமுறை மின்னல் கூட்ட (Flash Mob) நடன நிகழ்ச்சி கண்களுக்கு விருந்தாய் அமைந்தது! விழாவின் கலை நிகழ்ச்சிகள் அய்யனார் உருவச்சிலையிலிருந்து பறை இசை முழக்கத்துடன் ஆரம்பித்தன. புலியாட்டம் மற்றும் சிலம்பாட்டம் முன்னே செல்ல, வீச்சரிவாள் வேல் கம்போடு கம்பீரமாக அய்யனார் ஆடிவர, மக்கள் முளைப்பாரியை எடுத்துப் பின்னால் சென்ற பிரமிப்பூட்டும் ஊர்வலம் அரங்கத்தின் வாயில் வந்தடைந்ததும், கிராமிய வில்லுப்பாட்டு ஊர்வலத்தையும் பார்வையாளர்களையும் வரவேற்றது. வில்லுப்பாட்டிலேயே விழாவை தொகுத்து வழங்கியது புதுமையாகவும் சிறப்பாகவும் இருந்தது. இயற்கையையும் இறையையும் வணங்கி தமிழ்த்தாய் வாழ்த்துடன் திருவிழா ஆரம்பித்தது!

போர்ட்லண்ட் மாநகரத் தமிழ் மன்றத் தலைவர் ஆனந்தன் அய்யாசாமியும், உப-தலைவர் ராகேஷ் இராஜகோபலனும், சிறப்பு விருந்தினர் லேக் ஓஸ்வேகோ மேயர் கென்ட் ஸ்டட்பேக்கர் அவர்களை வரவேற்று கௌரவித்தனர். பறை இசைத்து கலை நிகழ்ச்சிகள் மேயரால் துவக்கி வைக்கப்பட்டன! சுமார் 50 பேர் பங்கு கொண்ட பிரம்மாண்ட நாட்டியம் அரங்கத்தையே அதிர வைத்தது. சிறார்கள், கொஞ்சும் தமிழில் திருக்குறள் ஒப்பிவித்தது அனைவரின் மனதையும் கொள்ளை கொண்டது. இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் கலந்து கொண்ட பேச்சுப் போட்டி செவிக்கு விருந்தாகவும், சிந்தனைக்கு வித்தாகவும் அமைந்தது. இதையடுத்து வந்த போர்ச் சிலம்பம், தமிழரின் வீரத்தை மக்கள் மனதில் நினைவூட்டியது! அரங்கம் அதிர சிறப்புப் பறை நிகழ்ச்சி பார்வையாளர்களைக் கவர்ந்தது! மூன்று மணிநேர கலை நிகழ்ச்சிகளுக்குப் பின் சுடச்சுட இறக்குமதி செய்யப்பட்ட திருநெல்வேலி இருட்டு கடை அல்வா, வடை மற்றும் தேனீர் விருந்தளித்து அயலகத்தில் மண் மணம் மாறா கிராமியப் பொங்கல் கொண்டாட்டங்கள் நிறைவுபெற்றன.

22. குறள் அதிகார எண் கணக்கு: பத்ததனோடு, ஒன்பதனைச் சேர்த்து, எண்பத்து ஒன்றதனைக் கூட்டி, பத்தொன்பதனைக் கழித்தால் என்ன நிலைக்கும்?

அ) 27 ஆ) 6 இ) 84 ஈ) 79.





## அரிசோனா தமிழ்ச்சங்கம் – பாரம்பரியப் பொங்கல் விழா





புதுமையும், அன்பும் பொங்கிடவும், மகிழ்ச்சியும் செல்வமும் தங்கிடவும், கொண்டாடப்படும் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா, பீனிக்ஸ் நகரில் தமிழ்க் குழந்தைகளை முன்னிறுத்தி, தமிழ்சங்கப் பள்ளியில், தை 4 ஆம் நாள் இனிதாய் நடந்தேறியது. நமது தமிழ்ப் பாரம்பரியம் உலகம் முழுவதும் தற்போது அறியப்பட்டு, பெருமைப் படுத்தப்பட்டு வரும் வேளையில், நம் குழந்தைகளில் பலர் தமிழ்நாட்டில் நடக்கும் பொங்கல் கொண்டாட்டத்தைப் பார்த்திருக்க மாட்டார்கள் என்பதால், அவர்களுக்கென அது குறித்த விளக்கப்படங்கள் மற்றும் காட்சிகள் காட்டப்பட்டன. உழவர்களின் தோழனாகிய மாடுகளுக்கான மாட்டுப் பொங்கல் மற்றும் மஞ்சு விரட்டு (ஏறு தழுவல்) வீர விளையாட்டும் விளக்கப்பட்டது. இதன்மூலம், பொங்கல் திருநாளின் அருமையம், பெருமையும் அவர்கள் மனதில் விதைக்கப்பட்டன.

வீரத் தமிழர்களாய், அழகிய வெள்ளை வேட்டி சட்டை அணிந்து, பெற்றோர்களுடன் ஆண் குழந்தைகள் வந்தனர். அழகிய தமிழ் மகள்களாகப் பலவண்ணப் பாரம்பரிய பாவாடை சட்டையுடன், பெண் குழந்தைகள் பங்கேற்றனர். அக்காட்சி காண்பவர் மனதை கொள்ளை கொண்டது. ‘இது தமிழகத்தில் நடக்கும் பொங்கலோ! என அதிசயிக்கும் வண்ணம், குழந்தைகள் பட்டாம் பூச்சிகளைப்போல ஓடியாடியும், ஆடிப்பாடியும் மகிழ்ந்தனர். வாழையும், செந்நெல்லும், மஞ்சளும், கரும்பும் விழா அரங்கத்தில் வீற்றிருக்க, அழகிய கோலமிட்ட புதுப்பானையில், பச்சரிசி வெல்லமிட்டு பொங்கல் பொங்கியது. பெற்றோர்களும் மற்றவர்களும் பெருமையுடன் ஒருவருக்கொருவர் பொங்கல் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இதனால் தமிழர்களின் பாரம்பரியம் அமெரிக்காவில் கொடிகட்டிப் பறந்தது இவ்வாறு, நல்வாழ்வு பொங்க, செல்வம் தங்க, இயற்கை வேளாண்மை செழிக்க, சிறப்பாகக் கொண்டாடப்பட்டது அரிசோனா சங்கத்தின் பொங்கல் விழா.



## தமிழ் மக்கள் மன்றம் – நியூ ஹாம்ப்ஷயர்

தமிழ் மக்கள் மன்றத்தின் பொங்கல் விழா 2020, நாஷ்வா சவுத் பள்ளியில், சனவரி 25 ஆம் நாளில் கோலாகலமாக நடைபெற்றது. 700–க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற விழாவில், ஆடல், பாடல், நடனம், ஜோடி நடனம், அறுசுவை விருந்து என்று உள்ளத்திற்கும், நாவிற்கும் மகிழ்ச்சியளிக்கும் இனிய தித்திக்கும் விழாவாக பொங்கல் கொண்டாட்டம் அமைந்தது. விழாவில் தமிழ்ப் புலவர்கள் மற்றும் கீழடி சார்ந்த புகைப்படக் கூடம் அனைவரது கவனத்தையும் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது.



23. குறள் அதிகார எண் கணக்கு: எழுபத்து மூன்றதனையும், எழுபத்திரண்டதனையம் சேர்த்து, அறுபத்து இரண்டதனைக் கூட்டி, அறுபத்தேழுதனைப் பெருக்கினால், யாருடைய நட்பும், பாராட்டும் தேடிவரக் கூடும்?

அ) மன்னர். ஆ) அமைச்சர் இ) குடிமக்கள் ஈ) சான்றோர்






## தென் பூவகத் தமிழ்ச்சங்கம் - தைப் பொங்கல் திருவிழா

1 ஆம் நாள், 2 ஆம் மாதம், 3 கவுன்ட்டிகளும் சேர, 4 பக்கமும் ஓடி ஆடி, 5 மணி நேரத்திற்கு, 6 சுவை விருந்துடன், 7, 8 நிகழ்ச்சிகளுடன் 700 அன்பர்கள் பங்குபெற, 20 ஆண்டுகளாக செவ்வனே நடந்து வரும் எங்கள் தென் பூவகத் தமிழ்ச்சங்கத்தின் 2020 தைப் பொங்கல் திருவிழா 2.1.2020 அன்று மார்க்கம் பூங்காவில் கோலாகலமாக நடைபெற்றது.

எங்கள் சங்கத்தின் திறன் படைத்த குழு, பூங்காவின் கூடாரத்தை, மிக நேர்த்தியாக அலங்காரம் செய்து, தமிழ்நாட்டுத் தாழ்வாரமாகவே மாற்றினார்கள். தூணுக்குத் தூண், வாழையும் கரும்பும் வந்தவர்களை வரவேற்க, வண்ணத்துப் பூச்சிகளுக்கு போட்டியாகப் பட்டுச் சேலை தரித்த எங்கள் தாய்மார்கள், 3 வகை கரும்புகளுக்கு இடையே, 5 வகைப் பொங்கல் பொங்கி, விழாவைத் தொடங்கி வைத்தார்கள். 12 குழி வைத்த தட்டில் 13 வகை விருந்து, 100-க்கும் மேற்பட்ட பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என அனைத்து வயதினரும் பங்கு கொண்ட “திடீர்க் கும்பல்” (Flash Mob) நடனம் மற்றும் சிலம்பாட்டம், கும்மி, உறியடி, கபடி, கைப்பந்து, தொழில் முனைவோர் முக்கு (Entrepreneur's Corner) மற்றும் பல விளையாட்டுகளுடனும், அதன் நேரடி வர்ணனையுடனும் விழா அருமையாக நடைபெற்றது. முன்நாள் தலைவர்களும், அவர்கள் குழுக்களும், வாரிக்கொடுத்த வள்ளல்களும், தன்னார்வத் தொண்டர்களும், பங்கேற்பாளர்களும் இந்த விழாவினை, ஒரு சிறந்த குடும்ப விழாவாக நடத்த உறுதுணையாக இருந்தார்கள்.



## விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம் - பொங்கல் விழா

கடந்த பிப்ரவரி 22 ஆம் நாளில், விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம் கொண்டாடிய பொங்கல் விழாவில், 200 தமிழ்க் குடும்பங்கள் கலந்துகொண்டுச் சிறப்பித்தார்கள். தமிழகச் சூழலை அமெரிக்க மண்ணிற்குக் கொண்டு வரும் வகையில் அமைக்கப்பட்ட, தேநீர் கடை, சர்பத் கடை, பஞ்சுமிட்டாய் கடை மற்றும் தமிழ் ஆடை நிலையம் என அனைத்து ஏற்பாடுகளும் வந்திருந்த அனைவரையும் கவர்ந்தன. இவை தவிர, குழந்தை களுக்கான பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி, கோலப்போட்டி மற்றும் பட்டிமன்றம் எனப் பல் சுவை நிகழ்ச்சிகளுடனும், அறுசுவை விருந்துடனும் பொங்கல் விழா அருமையாக நிறைவேறியது.



24. குறள் அதிகார எண் வினா: நூற்று நான்கதனை, இரண்டதனோடு சேர்த்து, அறுபத்தொன்றைத் துறந்து, நாற்பத்தொன்றதனை நன்கறிந்து, பார்போற்றும் முப்பத்தொன்றதனைக் கொண்டிருந்தால் இதற்கு நல்லது.

அ) 75 ஆ) 77 இ) 74. ஈ) 24






## டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேஷன் - மினசோட்டா



டுவின் சிட்டீஸ் தமிழ் அசோசியேஷன் (TCTA), கடந்த ஜனவரி 10 ஆம் நாளில், தமிழர் திருவிழாவான பொங்கல் திருநாளை கோலாகலமாகக் கொண்டாடியது. இந்த நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். குழந்தைகளும் பெரியோர்களும் பறை இசை, காவடி, கரகாட்டம், வில்லுப்பாட்டு எனத் தமிழர் பண்பாட்டை பறைசாற்றும் கலை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினர். இதனோடு, பரதநாட்டியம் மற்றும் மேற்கத்திய நடனங்களாடி தங்கள் திறமையை மேடையேற்றி, எல்லோரையும் மகிழ்வித்தனர்.

## மிச்சிகன் தமிழ்ச்சங்கம் - தமிழர் திருவிழா



மிச்சிகன் தமிழ்ச்சங்கம் கடந்த மாதம் தமிழர் திருவிழாவை அமோகமாகக் கொண்டாடியது. இந்த முறை பதிவு மேசையில் மக்களை வரவேற்க பன்னீர், சந்தனம் மற்றும் குறிப்பாகப் பெண்களுக்கு மல்லிகைப் பூ கொடுத்தும் வரவேற்றனர். மேலும் நிகழ்ச்சிக்கு வந்தவர்களுக்கு சுவையான வாழையிலை விருந்து பரிமாறி, உணவு உண்ட பிறகு வெற்றிலை, பாக்கு மற்றும் சுண்ணாம்பு கொடுத்தது வந்தவர்களை வியப்பில் ஆழ்த்தியது. மிச்சிகன் தமிழ்ச்சங்கத்தின் கதம்பம் பத்திரிகை முதன்முறையாக வலைவொளியாக அறிமுகப்படுத்தப்பட்டதைப் பற்றிய அறிவிப்பு எல்லோர் காதிலும் தேனாக ஒலித்தது.

மிச்சிகன் தமிழ்ச்சங்கத்தின் இலக்கியக் கழகம் சாகித்ய அகாடமி விருது வென்ற சு.வெங்கடேசன் அவர்களின் 'வேள்பாரி' என்ற வரலாற்று நாவலை பிரமாண்ட நாடகமாக நடத்தியது. பரம்புவின் பெருமை, அதன் பழங்குடி மக்கள் மற்றும் இயற்கையின் மீது பாரியின் பெருமை ஆகியவற்றை அமெச்சூர் கலைஞர்கள் மூலம் நாம் அறிய முடிந்தது. அதே நேரத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பரம்புவைக் கைப்பற்றுவதற்காக பாரிக்கு எதிராகப் போரை நடத்த, துரோகக் கூட்டணி சேர்ந்த காட்சி நம்மை அதிர வைத்தது. சுமார் 1.30 மணிநேரம் நடந்த நாடகம், முக்கலைகளான இயல், இசை மற்றும் நாடகம் ஆகியவற்றை உள்ளடக்கியதால் நமது விழாவிற்குப் பெருமை சேர்த்தது. அமெரிக்காவிலும், தமிழ்நாட்டிலும் உள்ள தமிழ்ச் சமூகங்கள் தமிழ்க் கலாச்சாரத்தை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதைப் பற்றி விவாதிக்க திரு.நெப்போலியன் மற்றும் நமது மிச்சிகன் பேச்சாளர்கள் 8 பேருடன் சிறப்புப் பட்டிமன்றம் தொடங்கியது. நேரம் போனதே அறியாமல் மனதிற்கு இதமாகவும், இனிதாகவும் விழா முடிவுற்றது.




25. குறள் அதிகார எண் வினா: நாற்பது மற்றும் நாற்பத்திரண்டில் சிறந்து, நாற்பத்து மூன்று கொண்டு, எழுபத்தாறு செய்து வந்தால் இவை தேடி வரும்.

அ) 24. ஆ) 98. இ) 89 ஈ) 5





## சின்சினாட்டி மாநகரத் தமிழ்ச்சங்கம்

பொங்கலை முன்னிட்டு, தொடர்ந்து மூன்றாவது ஆண்டு பாரம்பரிய விருந்தாக, சின்சினாட்டி தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்த வாழை இலை விருந்து, பிப்ரவரி 16 ஆம் நாளில் சிறப்பாக நடந்தது. 450-க்கும் மேற்பட்ட மக்கள் உண்டு மகிழ்ந்து, புத்தகக் கடையில் நூல்கள் வாங்கி, அரங்கில் அமைக்கப்பட்ட நிலையங்களில் மருதாணி வைத்து, மல்லிகைப் பூச் சூடி, புதுப் புடவைகளை வாங்கி, சற்று நேரத்தில் அந்த இடத்தையே நம்மூர் பொங்கல் பேரங்காடியாக மாற்றி மகிழ்ச்சியில் திளைத்தனர். வெற்றிசைப் பாடல் (கரோக்கி) பாடகர்களும், கொலம்பஸ் பறை மேளக் குழுவும் இந்த அருமையான பொங்கல் கொண்டாட்டத்திற்கு மேலும் மெருகேற்றினர். பேரவையின் 2019 விழாவில் மேடையேறிய பல சங்கக் குழுக்களின் பறையிசை ஏற்படுத்திய தாக்கத்தால், சின்சினாட்டியிலும் பறையிசைப் பட்டறை ஒன்றை பிப்ரவரி 22 – 23 தினங்களில் நடத்தினோம்.

கனெக்டிகட் மானுடம் பறைக் குழுவினர் எங்களுக்கு வழி காட்டி, பறை மேளங்களைத் தருவித்து, சிறப்பாகக் கற்றுத்தந்தார்கள். அதன் விளைவாக, இப்பொழுது சின்சினாட்டியில் 25 பெரியவர் மற்றும் சிறுவர்கள் கலந்த ஒரு அருமையான குழு உருவாகி, பறையின் தொன்று தொட்ட தாளத்தை ஓங்கி ஒலிக்கச் செய்து வருகிறது. நமது தமிழ்ப் பள்ளியில், திருக்குறள் போட்டி சிறப்பாக நடைபெற்றது. 70-க்கும் மேற்பட்ட மாணவ மணிகள் கலந்து கொண்டு திருக்குறள்களை தெளிவாக ஒப்பித்தும், அவற்றின் பொருள் கூறியும் அனைவரையும் கவர்ந்தனர்.







## ராச்சஸ்டர் வட்டாரத் தமிழர் அமைப்பு – பொங்கல் விழா

ராச்சஸ்டர் வட்டாரத் தமிழர் அமைப்பின் சார்பில், 2020 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழா, கடந்த ஜனவரி 18 ஆம் நாளில் கொண்டாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் மாலை 5:30 மணியளவில் விழா தொடங்கியது. குழந்தைகள் ஒவ்வொருவரும் பிடி அரிசி போட, உலையில் கொதித்த அரிசி பொங்கிட, அனைவரும் 'பொங்கலோ பொங்கல்' என மகிழ்ச்சியாகக் கூவி, தமிழர் திருநாளாம் பொங்கலை வரவேற்றனர்.

நமது அமைப்பின் முன்னெடுப்பான 'வேருக்கு நீர்' பற்றிய பகிர்தல், விழாவின் முத்தாய்ப்பாக அமைந்து அனைவராலும் வரவேற்கப்பட்டது. குழந்தைகளுக்கான விநாடி வினா, பாட்டுப்போட்டி மற்றும் கலைநிகழ்ச்சிகளை அனைவரும் கண்டு களித்தனர். வீட்டிலிருந்து கொண்டுவந்த உணவு விருந்துடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

## உங்களுக்குத் தெரியுமா – விடைகள்

1 – ஈ) மதியூகம்; 2 – அ) இயற்சொல்; 3 – ஈ) படைப்புவழித் திறனாய்வு; 4 – உ) மேலுள்ள அனைவரும்; 5 – இ) பொய்யா விளக்கு; 6 – ஈ) கயல்விழி – ஜெகசிற்பியன்; 7 – அ) பாரதிதாசன்; 8 – அ) பொய்கையாழ்வார்; 9 – அ) மோசி கீரனார்; 10 – ஈ) அறிவுடைநம்பி; 11 – ஈ) குடபுலவியனார்; 12 – இ) கோவூர் கிழார்; 13 – ஈ) பெருஞ்சித்திரனார்; 14 – ஈ) கீழ்க்கணக்கு; 15 – ஆ) கலாவதி, இ) ரூபாவதி;



## அயோவா தமிழ்ச்சங்கம் – தைப்பொங்கல் திருவிழா

அயோவா தமிழ்ச்சங்கத்தின் தைப்பொங்கல் திருவிழா, ஜனவரி 25, 2020 ஆம் நாளன்று நடைபெற்றது. குழந்தைகள் இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட, விழா மங்களகரமாகத் துவங்கியது. பொருளாளர் திரு. நல்லு இக்னேசியஸ் வரவேற்புரையாற்றினார். குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வகையில், வண்ணம் தீட்டுதல், ஓவியப் போட்டி, பலூன் பந்தயம், கல் குவித்தல், சாக்குப் பந்தயம் முதலான போட்டிகள் நடைபெற்றன. பெண்களுக்கான கோலம், கண்ணாமூச்சி போட்டிகளும், ஆண்களுக்கான ‘கபடி’ என்று விளையாட்டுப் போட்டிகள் களைகட்டின. அனைவருக்கும் பொதுவாக நடைபெற்ற உறியடித்தல் நிகழ்ச்சி சிறப்பம்சமாக இருந்தது. புதிய முயற்சியாக, கும்மி ஆட்டம் நடைபெற்றது. அதில் 4 வயது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கலந்து கொண்டு, தைப்பொங்கல் திருவிழாவின் மகிழ்ச்சியை அனைவருக்கும் பரவச் செய்தனர். அவர்களுக்கு விருதுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன. அயோவா தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. சுரேஷ், செயலாளர் திரு. பாபுபிரசாத், துணைத் தலைவர் (நிகழ்ச்சிகள்) திரு.மோகன் ராஜேஷ், துணைத் தலைவர்(உறுப்பினர்) திரு.பியோ மரியசூசை மற்றும் பொருளாளர் திரு. நல்லு இக்னேசியஸ் தைப்பொங்கல் திருவிழாவை வெகு விமரிசையாக நடத்தினர். அன்பின் வெளிப்பாடாக இருந்த தன்னார்வலர்கள், விழாவினை வெற்றியுடன் நடத்தப் பேருதவி செய்தனர். தலைவர் திரு. சுரேஷ் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

## உங்களுக்குத் தெரியுமா – விடைகள்

16 – அ) ஐங்குறுநூறு; 17 – அ) மாதரி; 18 – ஈ) வைகை; 19 – ஆ) ஒழுகிசை; 20 – இ) உமணர்; 21 – அ) சிறுபாணாற்றுப்படை;
22 – ஈ [79 நட்பு]; 23 – அ [மன்னர்]; 24 – இ [74 நாடு]; 25 – அ [24 புகழ்], ஆ [98 பெருமை]



## இரங்கல் செய்தி

பேரவைத் தலைவர் திரு. சுந்தர் குப்புசாமி அவர்களின் தாய் திருமதி வேலாத்தாள் குப்புசாமி அவர்கள், மார்ச் 10, 2020 அன்று கோயம்புத்தூரில் இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஐயா சுந்தர் குப்புசாமி மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு, பேரவை தனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரின் உயிர் இறைநிழலில் நிலைத்து நிற்க இயற்கையை வேண்டுகிறோம்.






நாம் அனைவரும் இந்த அமெரிக்க நாட்டில் புலம்பெயர்ந்த தமிழர்களாய், நல்வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எத்தனையோ வரலாறுகளையும் படைத்திருக்கிறோம், மேலும், பல்வேறு நெருக்கடியான சூழல்களையும் சந்தித்து வருகிறோம்.

குறிப்பாக நமது நண்பருக்கோ அல்லது குடும்பத்தினருக்கோ, எதிர்பாராத விபத்து அல்லது மரணம் நிகழும்போது நாம் எதிர்கொள்ளும் சவால்களை வார்த்தைகளால் சொல்ல இயலாது! 'நாம் என்ன செய்ய வேண்டும்' என்று அறியாமல் திகைத்து நிற்போம்! அத்தகைய ஒரு நெருக்கடியான சூழலில், உங்களுக்கு உதவிட வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை (FeTNA) அமைப்பு தொடங்கியுள்ள ஒரு புதிய குழு "உதவும் இதயங்கள்" ஆகும். உங்கள் நண்பருக்கோ, உறவினருக்கோ எதிர்பாராத மரணம் நிகழும்போது எங்களைக் கீழுள்ள எண்களில் தொடர்பு கொள்ளுங்கள்.

## 24X7 உதவும் இதயங்கள் தொலைபேசி எண் 1-866-FETNAHH

உடல் தகனம் செய்யும் முறை, புதைக்கும் முறை அல்லது தாய் நாட்டிற்கு எடுத்துச் செல்லும் முறை குறித்த அனைத்து விவரங்களும் உங்களுக்குக் கிடைத்திட உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்படும்.

**உங்கள் பேராதரவிற்கு நன்றி, உதவும் இதயங்கள் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை**

# FeTNA - Helping Hearts

We are all enjoying great lives in this great land of opportunities. We have created histories. At the same time, we have encountered lot of challenges!

Especially when any of our friends or family members encounter an emergency situation or death, the challenges we face cannot be explained in words. We will be completely clueless on what to do next! To help you in such unexpected situations, FETNA has formed the new wing called “Helping Hearts”. In the event of death of a friend or a family member, please immediately contact us.

## 24x7 Helping Hearts Emergency Number 1-866-FETNAHH

We will instantly help you and guide you on the procedures associated with burying or cremating the remains or transporting it to your homeland.

Thank you for your continued support,

**Helping Hearts FETNA**